

# இலக்கு

இதழ் 73

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ஏப்ரல் 12, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1




## சேமிப்புப் பண்பாடும் அதன் செயலிழப்பும்

து.கௌரீஸ்வரன்

## சிறிலங்கா அரசின் பொறுப்பற்ற நடவடிக்கை தமிழ் மக்களை அதிகம் பாதித்துள்ளது



வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும், தமிழ்த் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற வேட்பாளருமான **அனந்தி சசிதரன்**




## உண்மையை உணர்த்திய உலக சுகாதார தினம் 2020

காருண்யா


## கொரோனா தொற்றும், கர்ப்பிணிப் பெண்கள் பராமரிப்பும்

வைத்திய கலாநிதி **கே.ஈ.கருணாகரன்** மகப்பேற்றியல்,பெண் நோயியல் நிபுணர். மட்டக்களப்பு, போதனா வைத்தியசாலை



## மோடியினால் நிறைவேற்ற முடியாத தூய்மை இந்தியாவை கொரோனா நிறைவேற்றி வருகின்றது

கல்யாணி


தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

# இராணுவக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்த கோவிட் – 19 இனை சிறீலங்கா பயன்படுத்தக் கூடாது, – சூக்கா



கோவிட் 19 இற்கான இலங்கையின் இராணுவமயப்படுத்தப்பட்ட பதில் நடவடிக்கைக்கு பொது மக்கள் மேற்பார்வை போதாமல் இருப்பது சில பாரதூரமான மனித உரிமைகள் பற்றிய கரிசனைகளை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் தெரிவித்துள்ளது.

“கோவிட் 19 இற்கான பதில் நடவடிக்கையினை ஜனாதிபதி இருந்த அதே இராணுவப் படையணியிலே கடமையாற்றிய இலங்கையின் போர்க் குற்றவாளி ஒருவர் தலைமை தாங்குகின்றமையானது வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறல் மற்றும் மேற்பார்வை செய்தல் பற்றிய கேள்விகளை எழுப்புவதாக அடைக்கப்பட்ட சூழ்நிலையில் உள்ள சர்வதே உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

கோவிட் 19 அவசரகால நிலையைக் கையாள்வதற்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் சட்டம், விகிதசமம் மற்றும் பாரபட்சமின்மை போன்ற கோட்பாடுகளைக் கொண்டு வழிநடத்தப்பட வேண்டும் என நீதிக்குப் புறம்பான மற்றும் உடனடி அல்லது எழுமாற்றான கொலைகளுக்கான ஐக்கிய நாடுகளின் விசேட பிரதிநிதி அக்னஸ் கொலமாட் தெரிவித்துள்ளார்.

அரசாங்க அதிகாரிகளை விமர்சித்து சமூக வலைத்தளங்களில் பதிவுகளை மேற்கொள்பவர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பிரதி பொலிஸ்மா அதிபர் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார். இது கருத்துச் சுதந்திரத்தை மறுக்கும் செயல்.

அரசாங்கத்தின் பதில் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் சிவில், கட்சி சாரா சுயாதீனமான ஒரு பதில் நடவடிக்கை ஆணைக்குழுவினை அமைக்குமாறும், நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்கு தாம் விரும்பும் எதையும் செய்வதற்கு இராணுவம் மற்றும் காவல் துறையினர் அனுமதிக்கப்படக்கூடாது எனவும் நாம் இலங்கை அரசாங்கத்திற்கு அழைப்பு விடுக்கின்றோம். விசேடமாக ஏற்கனவே மதிப்பிழந்த அதிகாரிகளின் கள்ளத்தனமான நடவடிக்கைகள் மூலம் இராணுவக் கட்டுப்பாட்டை அமுல்ப்படுத்த கோவிட்19 இனை ஒரு சாட்டாக பயன்படுத்தக் கூடாது, என சூக்கா கருத்து தெரிவித்துள்ளார்.

# மீண்டும் ஏமாற்றப்பட்ட மலையக மக்கள்



மலையக தேயிலைத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றிற்கு 1000 ரூபாய்கள் ஊதியமாக வழங்கப்படும் என்று சிறீலங்காவின் புதிய அரசு தெரிவித்த வாக்குறுதிகள் மீண்டும் வழமை போல் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

முதலாளிமார் சம்மேளனத்துடன் பல சுற்று பேச்சுக்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் தற்போதைய கொரோனா வைரசின் நிலையை முன்நிறுத்தி சிறீலங்கா அரசும், முதலாளிமார் சம்மேளனமும் 1000 ரூபாயை ஊதியமாக வழங்க முடியாது எனத் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, கடந்த நாலரை வருடங்களாக பல வழிகளில் நாம் முயற்சிகளை மேற்கொண்டிருந்தோம். ஆனால் ஊதிய உயர்வு விடயத்தில் எம்மால் முன்னேற்றம் காணமுடியவில்லை என முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இன்று கொரோனா காரணத்தை காட்டி, ஆயிரம் ரூபாவை நிறுத்த முடியாது. உண்மையில் நாடெங்கும் கொரோனா காரணமாக தரும் நிவாரணம் கூட மலையக தமிழ் மக்களுக்கு ஒழுங்காக கிடைக்கிறதா? இதுபற்றி நான் கட்சி தலைவர் கூட்டத்தில் உரக்க சொல்லியும், முறைப்படி கிடைக்காமல் ஓரவஞ்சனைதான் நடக்கிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கோவிட்–19: இறப்பு எண்ணிக்கை 108,480 ஆக அதிகரிப்பு



கொரோனா வைரசின் தாக்கத்தினால் உலகில் உள்ள நாடுகள் அதிக உயிர் மற்றும் பொருளாதார இழப்புக்களை சந்தித்து வருவது நாம் அறிந்ததே. இந்த நிலையில், நேற்று (11) வரையில் 108,480 பேர் பலியாகியுள்ளதுடன், 1,774,063 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் 401,500 பேர் குணமடைந்துள்ளனர்.

அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளில் அமெரிக்கா, இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், பிரித்தானியா ஆகியவை அடங்கும். பிரித்தானியாவில்9,875 பேர்பலியாகியுள்ளனர். ஸ்பெயினில் 16,606 பேர் பலியாகியுள்ளதுடன், இத்தாலியில் 19,468 பேர் மரணித்துள்ளனர். பிரான்ஸ் இல் 13,832 பேர் பலியாகியுள்ளனர், அமெரிக்காவில் 20,469 பேர் பலியாகியுள்ளதுடன், அங்கு நாள் ஒன்றிற்கு ஏறத்தாள 2,000 பேர் மரணித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்காவில் மே 11 பாடசாலைகள ஆரம்பம்

எதிர்வரும் மே மாதம் 11 ஆம் நாள் சிறீலங்காவில் உள்ள பாடசாலைகள் இரண்டாம் தவணைக்காக ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிறீலங்காவின் கல்வி அமைச்சு நேற்று (11) தெரிவித்துள்ளது.

ஏப்பிரல் 20ஆம் நாள் ஆரம்பிப்பதாக முன்னர் தீர்மானிக்கப்பட்ட போதும், தற்போது மாணவர்களின் பாதுகாப்பு கருதி அது பிற்போடப்பட்டுள்ளது. விடுமுறையின் போது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை தொலைத் தொடர்பு சாதனங்களின் ஊடாக மேற்கொள்வது தொடர்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பல்கலைக்கழகங்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் பல்கலைக்கழ மானிய ஆணைக்குழுவின் முடிவை எதிர்பார்த்துள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

# போலியான தகவல்கள் பரவுவதை தடுக்க வற்ஸ்அப் நடவடிக்கை

போலியான தகவல்கள் சமூகவலைத் தளங்களில் பரவுவதால் மக்கள் மிகவும் அச்சமான நிலைக்கு தள்ளப்படுவதுடன், சில சமயங்களில் தவறான தகவல்களால் மக்கள் பணத்தையும் இழந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இதனை தடுக்கும் முயற்சிகளை வற்ஸ்அப் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. ஒருவர் 5 பேருக்கே தகவல்களை அனுப்ப முடியும் என்ற கட்டுப்பாட்டை கடந்த வருடம் கொண்டு வந்த இந்த நிறுவனம் தற்போது அதிகம் பகிரப்பட்ட தகவல்களை ஒருவருக்கே அனுப்ப முடியும் என்ற கட்டுப்பாட்டை கொண்டு வந்துள்ளது.

# உதிக்கின்ற ஞாயிறு, உயிர்த்த ஞாயிறு!

பெரிய வெள்ளி தினத்தன்று அவரவர்
தத்தம் பாரச் சிலுவைகளோடு
அறையப்பட்டிருக்கின்றோம்!
அரியவைகள் அவ்வப்போது
அரிதாக மட்டுமே வந்துபோகின்றன!

பாரங்களைச் சுமந்தோமா,
பாவங்களைச் சுமந்தோமா தெரியாது
ஆனால் அத்தனைபேரும்
தனித்தனியேயும், கூட்டாகவும்
சுமக்கின்ற பொறுப்புக்களை உணரத்
தொடங்கியிருக்கின்றோம்!

தேடித்திரிந்தவையெல்லாம் தேவையற்றதாய்
உணர்ந்த நிலையில், தேங்கிக்கிடந்தவற்றை
தெய்வீகமாய்த் தேடத்தொடங்கும்
புதுமை கொள்கிறது உலகு!

வரும்போது படைத்துக் கிடந்த பூமி
எவர்மீதும் எதுவித பாராபட்சங்களையும்
காட்டி நிற்கவில்லை, நாம் தான்
சுயலக்கடிவாளம் பூட்டி, பூமியின்
மாற்றமுடியாத நியதிகளையும்
நமக்காக மாற்றத்துடித்துக்
களைத்துப்போயிருக்கின்றோம்!

நற்செய்தி என்னவெனில்,
இம்முறை உயிர்த்த ஞாயிறு
எல்லோர்க்குமுண்டு,
தினந்தோறும் உதிக்கின்ற ஞாயிறின்
நல்வரவைத் திடமோடு எதிர்பார்த்து, நல்லதோர்
உதயத்தின் திசைநோக்கிக் கைகூப்பிக் காத்துக்
கிடக்கின்றோம்!

-காந்தள்-

# விவசாயிகளை கைவிட்டது சிறீலங்கா அரசு



சிறீலங்கா அரசின் பொறுப்பற்ற நடவடிக்கையினால் விவசாயிகள் மிகப்பெரும் அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளதாக யாழ். விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

சிறீலங்கா அரசு மேற்கொண்டு வரும் தொடர் ஊரடங்குச் சட்டம் யாழ். விவசாயிகளை மிகப் பெரும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகள் தமது விளை பொருட்களான தக்காளி, கத்தரிக்காய், வெங்காயம் என்பவற்றை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதேசமயம் தென்னிலங்கையில் உள்ள விவசாயிகளும் தமது விளை பொருட்களை சந்தைப்படுத்த முடியாது, குறைந்த விலையில் விற்பனை செய்வதாக அல்லது அவற்றை எறிவதாக சிறீலங்கா விவசாயிகள் சபையின் செயலாளர் ரி.பி. சரத் தெரிவித்துள்ளார்.


எம்பிலிப்பிட்டியா, தம்புதெகமா, நுவரேலியா, தம்புள்ள கெபெற்றிபோல ஆகிய பிரதேசங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# அரிசி விநியோகம் அத்தியாவசிய சேவையாக அறிவிப்பு

அரிசி மற்றும் நெல் ஆகியவற்றின் விநியோகம் அத்தியாவசிய சேவையாக அறிவித்துள்ள சிறீலங்கா அரசு அதற்கான சில்லறை விலையையும் நிர்ணயித்துள்ளது.

கீரிச் சம்பா கிலோ 125 ரூபாய், சம்பா கிலோ 90 ரூபாய், பச்சை அரிசி கிலோ 85ரூபாய், நாட்டரிசி கிலோ 90 ரூபாய்கள் என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனை அவதானிக்கும் பொறுப்பு கிராம சேவகர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

# பெரிய வெள்ளியும் தமிழரும்



*பெரிய வெள்ளி*
*மனிதனாக நிற்பது கடவுள்தான்*
*என்றாலும் மனிதத்தை வாழவிட மாட்டோமென்று மேலாதிக்க சக்திகள் உலகுக்கு நிறுவிய நாள்!*
*இறையிணைப்பால்*
*வாழ்வு தந்து வாழ்விற்கும் அற்புதமான மொழியின் சொந்தக்காரராக*
*அன்பான பண்பான பண்பாட்டின் கலாச்சாரத்தின்*
*தொடர்ச்சியாக இறைவன் எம்மைத் தமிழராகத் தோற்றுவித்தார்.*
*இதனால் மேலாதிக்க சக்திகள் எமக்கும் சாதியத்தால் சாவுக்குத் தீர்ப்பிட்டன.*
*தீண்டாமை என்னும் என் சிந்தனையைக் கிழிக்கும் முள்முடி சூட்டினர்.*
*கீழானவன் என்று சிவப்புப் போர்வை போர்த்தனர்.*
*அதிகாரப்படுத்தல் என்னும் சவுக்கால் என் தமிழ்க் கட்டமைப்புகள் நொறுங்கும் வரை அடித்து நொறுக்கினர்.*
*இவனுக்கு அரசுரிமையா இறைமையா என காறி உமிழ்ந்தனர்.*
*பொருளாதார நெருக்கடிகள் என்னும் பாரச்சிலுவையைத் தோளில் சுமத்தி அடிமையென முதல் முறையும் உரிமைகள் இல்லாதவனென இரண்டாம் முறையும்*
*இந்த மண்ணே உந்தன் சொந்த மண் இல்லையென்று மூன்றாம் முறையும் குப்புற வீழ்த்தினர்.*
*அதையும் தாண்டி எழுந்த போது கட்சிகள் என எனது ஆடையையே கிழித்து நார்நாராக்கி என்னை நான் சுமந்து வந்த சிலுவையுடனேயே அதிலிருந்து விடுபடாதபடி போலியான அரசியல் வாக்குறுதிகள், மாயமான தலைமைப் பதவிகள்,*
*கட்சித் தலைவனே அனைத்தும் எனும் மயக்க மருந்துகள்,*
*எனது கையைக் கொண்டே எனக்கெதிராகத் தீர்ப்பெழுத வைக்கும் தேர்தல்கால உத்திகள்*
*என்னும் நரித்தந்திரங்கள், வென்றவனுடன் சேர்ந்து வெல்ல வைத்தவனையே கொன்றழிக்கும் தந்திரோபாயங்கள், என்னும் ஐந்து ஆணிகள் கொண்டு*
*இறுக்கமாகப் பிணைத்தனர்.*
*மற்றவர்களை விடுவிக்கப் போகிறாயா இயலுமானால் உன்னையே விடுவி பார்ப்போம் என எக்காளமிட்டனர்.*
*என் தந்தையே என் தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் இவர்களை மன்னியும் என மனிதம் மனிதத்திற்காக இறைவனை வேண்டிய நிலையில் இன்னுயிர் நீத்தவர் கிறிஸ்துவுடன் கிறிஸ்துவாகச் சிலுவையில் தொங்கிய நாளிது!*
*இதோ திருச்சிலுவை இதிலேதான் தொங்கியது உலகின் மீட்பு என ஆயிரம் ஆயிரம் தமிழர்கள் தோளில் தொடர்ந்து சிலுவை சுமப்பதால் தமிழக தமிழீழ எல்லைகளையும் தாண்டி உலகெங்கும் மனிதம் வாழத் தாங்கள் உழைக்கும் தமிழர்களால் மீண்டும்*
*உலகெங்கும் தமிழர்களின் உயிர்ப்பு!*
*கொரோனாவிற்கு எதிரான மனித யுத்தத்தில் முன்னணிப் படையாகத் தமிழரைக் கண்டு உலகே வியக்கிறது.!*
*உலகயினமாக தேசம் கடந்துறை தமிழர்கள்! உலக மொழியாகத் தமிழ்மொழி!*
*என்னுடைய சமாதானம் உங்களோடு இருப்பதாக என உயிர்த்த கிறிஸ்துவின் தொடர்ச்சியாக உலகின் முன் தமிழர்கள்!*

**- பற்றிமாகரன்**

## இலக்கு

### மீண்டும் தமிழ் மக்களுக்கு நினைவுபடுத்தப்பட்ட சிறீலங்காவின் மாறாத இனவாதம்

கொரோனா வைரசின் தாக்கம் உலகில் உள்ள பெரும்பாலான நாடுகளை மிகப்பெரும் அனர்த்தத்திற்குள் தள்ளியுள்ளது. 100,000 இற்கும் மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளதுடன், 1.7 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெருமளவான மக்கள் வேலைகளை இழந்ததால் உலகம் மிகப்பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. இந்த நிலையில் உலக நாடுகள் தமது குடிமக்களுக்கு பல சலுகைகளை மேற்கொண்டு வருவதுடன், சில நாடுகள் கைதிகளையும் விடுவித்துள்ளன.

நோயின் தாக்கத்தில் இருந்து பாதுகாக்கும் நோக்கத்துடன், கைதிகளை விடுதலை செய்யுங்கள் என ஐக்கிய நாடுகள் சபையும் கோரிக்கை விடுத்திருந்தது. பல நாடுகள் அதனை கருத்தில் கொண்டு கைதிகளை விடுவித்தும் உள்ளன.

அது மட்டுமல்லாது போர் இடம்பெற்ற பகுதிகளில் வாழும் மக்கள் மிகவும் குறைந்த வசதிகளுடன் வாழ்வதால் இந்த அனர்த்தம் அவர்களை மேலும் பாதிக்கும் என ஐ.நா தெரிவித்துள்ளது.

சிறீலங்காவிலும் தமிழ் மக்கள் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளனர். போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்போதும் ஒரு இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் தான் வாழ்கின்றனர். பலரின் குடும்ப உறுப்பினர்கள் தற்போதும் அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் மீது இன்று வரை குற்றம் எதுவும் சுமத்தப்படவில்லை. அவர்களை நம்பி வாழும் பல தமிழ் குடும்பங்கள் தற்போதைய நிலையில் மிகப்பெரும் துன்பத்தை எதிர் நோக்கலாம்.

எனவே தான் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புக்கள் தமிழ் மக்கள் மத்தியில் தோன்றியிருந்தன. ஆனால் சிறீலங்கா அரசு இந்த மிகப்பெரும் அனர்த்தத்திலும் தனது இனவாதத்தை கைவிடவில்லை.

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் சிந்திக்காத சிறீலங்கா அரசு, தமிழ் மக்களை படுகொலை செய்த இராணுவச் சிப்பாயை விடுவித்ததுடன் அண்மையில் சிறையில் இருந்த 2000 இற்கு மேற்பட்ட ஏனைய கைதிகளையும் விடுவித்திருந்தது. ஆனால் அவர்களில் ஒருவர்கூட தமிழ் கைதி இல்லை என்பது தான் இனவாதத்தின் உச்சம்.

அது மட்டுமல்லாது, கோவிட்-19 நடவடிக்கைக் குழுவிற்கு தலைவராக ஐக்கிய நாடுகள் சபையினால் போர்க் குற்றவாளி என உறுதிப்படுத்தப்பட்ட தனது இராணுவத் தளபதியை நியமித்துள்ள சிறீலங்கா அரசு, ஏனைய பொறுப்புக்களிலும் படை அதிகாரிகளை நியமித்து கொரோனா நெருக்கடியிலும் தமிழ் மக்களை மிகுந்த அச்சத்திற்குள் தள்ளியுள்ளது.

சிறீலங்கா அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் கருத்துக் கூறுபவர்களையும் படையிரைக் கொண்டு கைது செய்தும், மிரட்டியும் வருகின்றது. அரசின் இந்த நடவடிக்கைகள் குறித்து அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்பகம், அனைத்துலக மன்னிப்புச் சபை, அனைத்துலக உண்மைக்கும் நீதிக்குமான அமைப்பு போன்றவை தமது கவலையையும், கண்டனத்தையும் தெரிவித்துள்ளன.

ஆனாலும், சிறீலங்கா அரசின் இந்த நடவடிக்கைகள் தொடர்பில் எந்தவித கருத்துக்களையும் தெரிவிக்காது அமெரிக்காவும், ஐரோப்பிய ஒன்றியமும், இந்தியாவும், சீனாவும் சிறீலங்காவுக்கு நிதி உதவியையும், ஏனைய உதவிகளையும் வழங்கி வருவது தமிழ் மக்களின் மனங்களை மேலும் வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

அனர்த்த காலத்தின் போது ஒரு நாட்டுக்கு ஏனைய நாடுகள் நிதி வழங்குவது வழமையானதே ஆனால் அந்த நிதி அங்கு வாழும் எல்லா இன மக்களுக்கும் சமமாக சென்றடைவதற்கான ஏதுநிலைகளை அந்த நாடு கொண்டுள்ளதா என்பதை அவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

கோவிட்-19 தொடர்பாக கொண்டுவரப்படும் அவசரகால சட்டங்களை ஹங்கேரியின் பிரதமர் விக்ரோர் ஒபர்ன் தவறாக பயன்படுத்தி தனக்கு எதிரானவர்களை அடக்கி வருவதாக குற்றம் சுமத்தியுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் உசுலா வொன் டி லேயன் என்பவருக்கு சிறீலங்காவுக்கு 22 மில்லியன் யூரோக்களை உதவியாக வழங்கும் போது சிறீலங்காவின் இனவாதம் கண்ணுக்கு தெரியாமல் போனது தான் ஆச்சரியமானது.

***- ஆசிரியர்***



# கொரோனா தொற்றும், கர்ப்பிணிப் பெண்கள் பராமரிப்பும்

கொரோனா வைரஸ் தாக்கம் குறித்த அறிவும், ஆராய்ச்சி முடிவுகளும் அதற்கான பரிகாரம் மற்றும் மருந்தின் பாவனையும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளதனால் பாதிப்பின் கனமும் அதிகமானதாகவே இருக்கும். இந்நிலையில் கர்ப்பிணிப் பெண்களில் இவ்வைரஸ் தொற்று ஏற்படுத்தும் பாதிப்பும் சிகிச்சை முறை குறித்தும் கவனிக்கவேண்டியுள்ளது.

கோவிட்-19 வைரஸ் தாக்கம் உலகம் முழுமையையும் தலைகீழாகப் புரட்டி வதைத்துக் கொண்டிருப்பதனை கடந்த சில மாதங்களாக அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். மக்களது இயல்பு வாழ்க்கை முற்றாகவே பாதிப்படைந்தும், தொழிற்துறைகள் ஸ்தம்பிதமடைந்தும் உள்ளதுடன் மக்கள் வீடுகளுக்குள் முடங்கியும் உள்ளனர். பொதுப் போக்குவரத்து வெகுவாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் இன்னும் பல சமூக, பொருளாதார மற்றும் ஆன்மீக விடயங்களுக்கும் தடை நடைமுறையில் உள்ளது.

இருப்பினும் எமது நாடு உட்பட பெரும்பாலான நாடுகளில் நோய்வாய்ப்படுவோரின் எண்ணிக்கை 10 இலட்சத்தை தாண்டியிருக்கும் வேளையில், இறப்போரின் எண்ணிக்கை 95,000ஐ தாண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது தாக்கியுள்ள கொரோனா வைரஸானது புதிய பிரிவினதாகவிருப்பதனால் இவ்வைரஸ் தாக்கம் குறித்த அறிவும், ஆராய்ச்சி முடிவுகளும் அதற்கான பரிகாரம் மற்றும் மருந்தின் பாவனையும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே உள்ளதனால் பாதிப்பின் கனமும் அதிகமானதாகவே இருக்கும். இந்நிலையில் கர்ப்பிணிப் பெண்களில் இவ்வைரஸ் தொற்று ஏற்படுத்தும் பாதிப்பும் சிகிச்சை முறை குறித்தும் கவனிக்க வேண்டியுள்ளது.

இலங்கையில் குறிப்பாக கொழும்பு மாநகரில் காசல்வீதி பெண்கள் வைத்தியசாலை இத்தகைய வைரஸ் நோய்த்தாக்கத்திற்குள்ளாகும் கர்ப்பிணிப் பெண்களுக்கான சிகிச்சை நிலையமாக ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன், கொரோனா நோயாளிகளைக் கையாளுகின்ற வைத்தியசாலைகளும் இத்தகைய தாய்மாருக்கான சிகிச்சை நிலையங்களாகும் வாய்ப்பும் உள்ளது.

பொது மக்கள் கூடுவதனை தவிர்க்கும் பொருட்டு கர்ப்பவதிகளுக்கான கவனிப்பு நிலையங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் நடைபெறுகின்றதாயினும், சுகாதார சேவை அதிகாரி பிரிவில் கடமையாற்றுகின்ற பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், மருத்துவ மாதுக்கள் தங்கள் வழமையான நடைமுறைகளை கடைப்பிடித்து கர்ப்பவதிகளுக்கான கவனிப்பினை செய்துவர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, இருதய நோய் போன்ற இன்னோரன்ன நோய் நிலை கொண்ட தாய்மாருக்கான விசேட நிபுணத்துவ கவனிப்பு கிரமமாக இடம் பெறுவதற்கான ஒழுங்குகள் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுகின்றன. சிறிய வைத்தியசாலைகளிலிருந்து விசேட நிபுணத்துவ கவனிப்பிற்காக கர்ப்பவதிகளை அம்பியுலன்ஸ் வாகனம் மூலம் மாற்றுகின்ற நடைமுறையும் வழமைபோல் நடைபெறுகின்றது.
இவ்வாறான நிலையில் காய்ச்சல், சளிச்சுரம் போன்ற நோய் அறிகுறிகள் தென்படும் கர்ப்பவதித் தாய்மார் உடனடியாக வைத்திய கவனிப்பிற்குள் உட்படுவதுடன் ஏனையோர் முடிந்தவரையில் வீட்டில் தங்கியிருத்தலும் இந்நோய்த்தாக்கத்தின் பாதிப்பிலிருந்து விடுபட எமக்கு உதவியாக இருக்கும். மேலும் பொது இடங்களுக்குச் செல்லாதிருத்தல், தன் சுத்தம் பேணல் போன்ற அறிவுறுத்தல் நடைமுறைகளை கர்ப்பவதிகள் கடைப்படிப்பதுவும் அவசியமாகின்றது.

உலகளாவிய ரீதியில் இதுவரையில் ஒரு சில கர்ப்பிணித் தாய்மார்களே கோவிட்-19 வைரஸ் தொற்றுக்குள்ளாகி அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவ்வாறான 34 தாய்மாரில் மேற்கொள்ளப்பட்ட கணிப்புக்களின் பிரகாரம் இவர்கள் எவருக்கும் பாரதூரமான நோய்த் தாக்கம் காணப்படவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய தாய்மாருக்கான பிரத்தியேக கவனிப்பு ஏனைய தொற்றாளர்களுக்கு உள்ளவாறாகவே கடைப் பிடிக்கப்படல் வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றது.

இவர்கள் தனிமைப்படுத்தப்படுவதுடன் தங்கள் பிரதேச சுகாதாரசேவைப் பணியாளர்கள், பிரசவம் செய்யவிருக்கும் வைத்தியசாலை மற்றும் மகப்பேற்றியல் நிபுணர் ஆகியோருக்கும் அறிவிக்கப்படல் வேண்டும். இதன்மூலம் இத்தாய்மார் ‘எத்தகைய வைத்தியசாலையில் பிரசவிக்க வேண்டும்’ என்பதனை முன்கூட்டியே தீர்மானித்து அங்கு அனுப்பி வைக்கப்படல் அவசியமாகின்றது.

இது முக்கியமானது. ஏனெனில் கோவிட்-19 வைரஸ் தொற்று ஏற்பட்ட பெரும்பாலான தாய்மாரில் குறைமாதப் பிரசவம் நடைபெற்றுள்ளது அவதானிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினால் முன்கூட்டியே நடவடிக்கை எடுப்பது அவசியமாகின்றது.

### பிரசவம்

இவர்கள் சாதாரண பிரசவம் நடைபெற அனுமதிக்கப்படுவர். இவர்களது பிரசவம் விசேட கவனிப்பின் கீழ் பிரத்தியேகமாக ஒழுங்கு செய்யப்பட்ட பிரசவ அறையிலே இடம்பெறுவதுடன் பணியாளர்களும் மட்டுப்படுத்தப்பட்ட அளவினராகவிருப்பர். சிசேரியன் சத்திர சிகிச்சை மேற்கொள்ளவேண்டியிருப்பின் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ள சத்திர சிகிச்சை கூடத்திலே நடைபெறும். அத்துடன் பிரசவமாகும் குழந்தையும் ‘கோவிட் 19 வைரஸ் தொற்றுக்காகப் பரிசோதிக்கப்பட வேண்டியவர்’ என கணிக்கப்பட்டு பராமரிப்பில் வைக்கப்படுவார். மேலும் கருப்பையில் சிசுவைச் சூழவிருக் கும் அம்னியன் திரவத்திலும் இவ்வைரசு இனங்காணப்படவில்லை. இக்காரணத்தினால் கர்ப்பத்தில் சிசுவிற்குத் தொற்று ஏற்படும் வாய்ப்பு குறைந்தளவிலேயே உள்ளது.

### தாய்ப்பாலூட்டல்

பிறந்த குழந்தைக்கான தாய்ப்பாலூட்டலில் எந்தவித தடையும் இதுவரையில் விதிக்கப்படவில்லை. ஆகவே தாயும் சேயும் ஒன்றாக இருக்க அனுமதிக்கப்படுவர். அத்துடன், தாய்ப்பாலில் கோவிட் வைரஸ் கிருமி இனம்காணப்படவில்லை.



வைத்திய கலாநிதி **கே.ஈ.கருணாகரன்**
**மகப்பேற்றியல்,பெண் நோயியல் நிபுணர். மட்டக்களப்பு, போதனா வைத்தியசாலை**

அத்துடன் தாய்ப்பாலில் பிறந்த குழந்தைக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களுடன் நோய் எதிர்ப்பு பதார்த்தங்களும், ஓமோன்களும் அடங்கியிருப்பதால் தாய்ப்பாலூட்டல் ஊக்குவிக்கப்படுகின்றது.

மேலும் தாயிலிருந்து சேய்க்கு வைரஸ் தொற்றாமலிருப்பதற்கு தன்சுத்தம் பேணுதல், கைகளை சவர்க்காரமிட்டு கழுவுதல், குழந்தையை கையாள்வதை மட்டுப்படுத்துதல், பாலூட்டும் போது முகக்கவசம் அணிந்துகொள்ளல் முதலான நடைமுறைகளைத் தாய் கடைப்பிடிப்பது அவசியம்.

### பிரசவத்தின் பின்:

சகல கவனிப்பின் பின்னர் அவர்களது இல்லத்திலும் முடிந்தவரை நம்பிக்கையுள்ள ஒரு சிலர் மாத்திரம் தாய் சேய் இருவரையும் பராமரிப்பது சாலச்சிறந்தது. நாட்டிலிருந்து கோவிட் பிரச்சனை நீங்கும் வரை வெளியாரின் வரவு மட்டுப்படுத்தப்படுவதும் தாய் சேய் நலனுக்கு மிக அவசியமா கின்றது.

**“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
இல்லத்தில் பாதுகாப்பாக இருப்போம்”**

• • •



# சேமிப்புப் பண்பாடும் அதன் செயலிழப்பும்

கொரோனா பேரனர்த்தம் நம்மை ஆக்கிரமித்துள்ள இன்றைய சூழலில் சில வாரங்கள் ஊரடங்குச் சட்டத்திற்குள் வாழ வேண்டிய நிலைமைகளின் பின்னர் நம்மிடையே இல்லாமை பற்றிய செய்திகளும், கையேந்தி நிற்கும் மனிதர்களின் காட்சிகளும் ஊடகங்களில் பிரதானம் பெறுவதாகியுள்ளன.

இந்நிலையில் பரிதவிப்போருக்கு கருணையுள்ளங்காட்டுமாறு கோருதலும் அத்தகைய நடவடிக்கைகளில் கணிசமானவை தெரிந்தும் தெரியாமலும் விளம்பரங்களாக விரிவாக்கம் பெறுதலும் நடந்தேறுவதைக் காண்கின்றோம். தற்போதைய நிலையில் இல்லாதோருக்கு உதவுதல் உடனடியான தேவை என்பதை மறுக்க முடியாது. இருந்தாலும் சவால்களை எதிர்கொண்டு மீண்டெழுவதற்கான தூரநோக்குடன் இத்தகைய நிலைமைகள் வலுப்பெற்றதற்கான காரணங்களை ஆராய வேண்டியது அவசியமாக உணரப்படுகின்றது.

இந்த வகையில் நமது பலமாக இருந்து வந்த சேமிப்புப் பண்பாடு தொடர்பாகவும் அது பலவீனமடைந்தமைக்கான காரணங்கள் குறித்தும் ஆழமாகச் சிந்திக்க வேண்டியது அவசியமான தேவையாகியுள்ளது. சேமிப்புப் பண்பாட்டிற்குரிய பொறிமுறைமைகளின் செயலிழப்பே நமது சமூகங்களை பேரனர்த்தக் காலங்களில் கையேந்தும் நிலைமைகளுக்கு இட்டுச் சென்றுள்ளது என்பதை மறுக்க முடியாது.

நமது நாளாந்த உணவு தயாரிப்பின் போது அன்றைய நாளுக்காக ஒதுக்கப்படும் உணவுப் பொருட்களிலிருந்து சிறிதளவை எடுத்து அடுத்த நாளுக்காகச் சேமித்து வைக்கும் பண்பாட்டுக்குச் சொந்தக்காரராக நாம் வாழ்ந்து வந்தவர்கள். ஆனால் இந்தப் பண்பாடும் பழக்கவழக்கமும் எவ்வாறு நம்மிடமிருந்து விலகிச் சென்றன என்ற கேள்வியை நாம் கேட்க வேண்டியுள்ளது.

கையில் பணமிருந்தால் எதையும் எந்த நேரத்திலும் எங்கேயும் பெற்றுக்கொள்ள முடியும் என்ற நுகர்வு மனப்பாங்கினை வலுப்படுத்திய திறந்த பொருளாதாரமும் நகரமயமாக்கமும் நம்முடைய சேமிப்புப் பழக்கத்தை மெல்லமெல்லச் சாகடிக்கச் செய்துள்ளன. இதன் காரணமாக நம்முடைய பாரம்பரியமான தொழில் முறைகளும் விளைச்சலில், உற்பத்தியில் பங்கு வழங்குதலிலிருந்து விடுபட்டு பங்கிற்குப் பதிலாக பணத்தை வழங்குதலாக பரிமாணமடையும் நிலைமைக்குச் சென்றுள்ளது.

உதாரணமாக விவசாயத்தில் பங்கு பற்றும் வேலையாட்களுக்கு வழங்கப்படும் வேதனத்தின் ஒரு பகுதியான தானியப் பங்கீடு குறைவடைந்து அதற்குப் பதிலாக பணத்தைப் பெற்றுக் கொள்ளுதலாக மாற்றமடைந்தது. இதனால் நமது வீடுகளில் தானியம் மற்றும் உணவுப் பொருட்களின் சேமிப்பு இல்லாமலே ஆகிவிட்டது.

து.கௌரீஸ்வரன்

துரித நகரயமாக்கமும் அந்நகரங்களுக்கு என்று அளவுக்கு மீறி அதிகமடைந்த மதுபான விற்பனை அனுமதிகளும் பாரம்பரியமான விவசாயத்தின் சேமிப்பிற்குரிய தானியங்கள் பணமாக மாற்றப்பட்டு பானமாக சமிபாடடையச் செய்வதற்கான மனப்பாங்கை மேலும் மேலும் வலுப்படுத்தின.



நமது பாரம்பரியத் தொழில் முறைகளில் உபரி உற்பத்தி ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவற்றை வைத்து உப உற்பத்திகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. உதாரணமாக கரைவலைப் பருவ காலத்தில் அதிகளவான மீன்கள் கிடைக்கும் போது மேலதிகமானவற்றை கருவாடாக ஆக்கி அதற்கான தேவை வரும் போது பயன்படுத்தும் பண்பாடு மீனவ சமூகங்களின் பாரம்பரிய சேமிப்புப் பண்பாடாக இருந்து வந்தது.



ஆனால் திறந்த பொருளாதாரமும் தரகு வணிகமும் நிபந்தனைகளுடன் உற்பத்திகளை ஒரேயடியாக பணம் கொடுத்து மிச்சம் மீதியில்லாமல் வாரியள்ளிச்சுருட்டி குளிரூட்டிகளில் கொண்டு செல்லும் நிலைமைகளையே வலுப்படுத்தியுள்ளமையால் மீனவ சமூகங்களின் சேமிப்புப் பண்பாடு சீர்குலைந்தது.

இத்தோடு கடலுக்குப் போக முடியாத இயற்கை அனர்த்த காலத்தில் மீனவ சமூகத்தினரே கடைகளில் கருவாடு வாங்கும் நிலைமைகளுக்கும் இட்டுச் சென்றுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் கடந்த தசாப்தங்களில் போர் மேகம் சூழ்ந்திருந்த இருண்ட நாட்களில் ஒரு வேளை உணவுக்காக தம்மிடமிருந்த இறால் கருவாடுகளையும், கீரிக் கருவாடுகளையும் வயல் சார்ந்த பகுதிகளிலிருந்த விவசாயிகளிடம் கொடுத்து அதற்குப் பதிலாக நெல்லைப் பெற்று வந்து வயிறாறச் சாப்பிட்ட கதைகள் ஞாபகத்திற்கு வருகின்றன.

மேலும் மரபணு மாற்றம் செய்யப்பட்டு குறுகிய காலத்தில் கூடிய விளைச்சல் தருபவை எனும் கவர்ச்சிகரமான விளம்பரங்களுடன் நமது விவசாயத்தில் ஆக்கிரமிப்புச் செய்துள்ள விதையினங்களின் வருகையும் நம்மிடமிருந்த தானியச் சேகரிப்பினை செயலிழக்கச் செய்து விட்டன. உதாரணமாக வருடாந்தம் சோளன் செய்த பின்னர் அதன் அறுவடையில் ஒரு பகுதியை அடுத்த விளைச்சலுக்காகச் சேமித்து வைக்கும் நடைமுறை பெரும்பாலும் இல்லாமலே ஆகிவிட்டது. அதாவது சோளனை முற்ற விடுவதில்லை. முற்றிய சோளனில் மேலதிகமானவை அனர்த்தக் காலங்களில் மாவாக்கப்பட்டு பசிதீர்த்த கதைகள் இப்போது நினைவு கூரப்படுகின்றன.

இவ்விதமாக பல்வேறு பொறிமுறைகளுடன் நம்மிடம் இருந்து வந்த உணவுப் பொருட்களின் சேமிப்புப் பண்பாடு திடீரென உருவாகும் அனர்த்த காலத்தில் ஏற்படும் உணவுத் தட்டுப்பாட்டைத் தாக்குப் பிடிக்கும் நிலைமைகளை வலுப்படுத்தி வந்தன. இதனால் நமது சமூகத்தினர் எப்பேற்பட்ட அனர்த்தங்களின் போதும் பெரும்பாலும் பிறரிடம் கையேந்தாமல் வலிமையானவர்களாக வாழ்ந்தனர் என்கிறார்கள் ஆய்வாளர்.

எனவே! கொரோனா பேரனர்த்தம் நம்மிடமிருந்த சேமிப்புப் பண்பாட்டின் வலிமைகளை நமக்கு இடித்துரைத்து நிற்பதுடன் அது சீர்குலைந்தமைக்கான காரணங்களையும் தேடிஆராய வைத்துள்ளது. முடிவாக கொரோனாவிலிருந்து மீண்டெழுதல் என்பது நமது சேமிப்புப் பண்பாட்டின் பொறிமுறைகளையும் மீளுருவாக்கிக் கொண்டு வருதலாக இருக்க வேண்டும்.

• • •

# சிறீலங்கா அரசின் பொறுப்பற்ற நடவடிக்கை தமிழ் மக்களை அதிகம் பாதித்துள்ளது

வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும், தமிழ்த் தேசிய முன்னணியின் நாடாளுமன்ற வேட்பாளருமான **அனந்தி சசிதரன்**



**சிறீலங்கா அரசின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. அரசின் உதவித் திட்டங்கள்கூட மக்களை முழுமையாக சென்றடையவில்லை என வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினரும், தமிழ்த்தேசிய முன்னனியின் முன்னாள் நாடாளுமன்ற வேட்பாளருமான அனந்தி சசிதரன் இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய பிரத்தியோக நேர்காணலில் தெரிவித்துள்ளார்.**

**அதன் முழு விபரம் வருமாறு:**

**கேள்வி:**

**நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் வடக்கு கிழக்கு மாவட்டங்களிலுள்ள தமிழ் மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.**

**பதில்:**

வடக்கு கிழக்குடன் மலையகத்தையும் சேர்த்துக் கொள்ளலாம். இங்கு ஊரடங்குச் சட்டம் தளர்த்தி மீண்டும் போடப்படுகின்றது. இந்நிலையில் அன்றாட கூலித் தொழிலாளிகள் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்களிடம் காசும் இல்லை. அவர்களின் கைகளில் பொருட்களும் இல்லை. எங்கோ கோரோனா தொடங்கும்போது இங்கு இவ்வாறான அச்சுறுத்தல்கள் வரும் என அரசிற்கு தெரிந்திருந்தால் மக்களுக்கான நிவாரணப் பொருட்களை ஒழுங்குபடுத்திய பின்னர் இந்த ஊரடங்குச் சட்டத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் மிகக் குறுகிய காலத்தில் ஊரடங்குச் சட்டத்தை அமுல்ப்படுத்தியிருக்கின்றனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில் இருபத்தியொரு நாட்களாக இந்த ஊரடங்குச் சட்டம் தொடர்ச்சியாக இருக்கின்றது.

கொரோனா அல்லாது ஏனைய நோயால் பாதிக்கப்பட்டு கிளினிக் செல்ல முடியாது மருந்துகளை பாவித்துக் கொண்டிருக்கும் நிலை மக்களிடம் இருக்கின்றது. கொரோனா நோய்க்கு வெளிநாட்டினரது வருகையும் ஒரு காரணமாக இருக்கலாம். யாழ்ப்பாணத்தில் கொரோனாநோய்த் தொற்றால் ஒருவரும் இனங்காணப்படவில்லை. வெளிநாட்டிலிருந்து வந்த ஒரு பிரஜையால் பரப்பப்பட்டது எனப் பார்க்கின்றோம்.

அரசாங்கத்தில் வறுமையானவர்களுக்கு வழங்கப்படும் சமுர்த்தி உதவிகூட சீராக மக்களுக்கு சென்றடையவில்லை என்பது ஒரு வருத்தம். வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள், அன்றாடம் உழைத்து வாழும் மக்கள், மாற்றுத் திறனாளிகள், காணாமல் போனோர் குடும்பம், அரசியல் கைதிகள் குடும்பம் உட்பட மொத்தக் குடும்பமும் போரிலிருந்து மீளாத வறுமையிலேயே உள்ளனர். ஏனெனில் நிலையான வாழ்வாதார உதவித் திட்டங்களை அரசாங்கம் அங்கு மேற்கொள்ளவில்லை. அன்றாடப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு திட்டங்களை முன்னெடுத்ததே அன்றி கடந்த பத்து வருடங்களாகியும் நிலையான ஒரு திட்டத்தை அரசு முன்னெடுக்கவில்லை.

சில விவசாயிகள் இருக்கும் நெல்லை வைத்து கஞ்சி குடிக்கக்கூடிய வசதியுடன் இருந்தாலும் ஏனைய மக்களுக்கு கடினமாகவே உள்ளது. புலம்பெயர் மக்களும் குறுகிய ஒரு கொடுப்பனவுடன் வாழும் நிலையில் இருப்பதால் அவர்கள் கூட இங்கு இருக்கும் மக்களுக்கு உதவி செய்யும் சூழல் இல்லை. காசு அனுப்புவதற்கான வழிமுறைகளும் அங்கு இல்லை. இன்று கூடுதலான மக்களின் வாழ்வாதாரம் புலம்பெயர் மக்களின் நிதியிலேயே தங்கியுள்ளது.

இன்று வடக்கு நிலைமையைப் பார்த்தால் தொண்டு நிறுவனங்கள், தனவந்தர்கள், இளைஞர் அமைப்புகள், நிறுவனங்கள், சில அரசியல்வாதிகள் ஆகியோரே உதவி செய்து வருகின்றனர். இது அவர்களுக்கு போதுமானதாக இல்லை. ஒரு நெருக்கடி நிலை வரும் போது அரசாங்கமே அந்த நிலையை மாற்றி அமைக்கலாம். எந்தெந்த பிரதேசங்களுக்கு உதவித் திட்டங்கள் செல்லவில்லை என்று நாங்கள் சொல்லலாம். ஆனால் அரசாங்கமே கிராமமட்ட பொறிமுறை ஊடாக இந்த உதவிகளை மேற்கொள்ள வேண்டும். ஜனநாயக நாடு என்று சொல்லும் போது தொடர்ச்சியான ஊரடங்கை மேற்கொள்வதும் விமர்சிக்கப்படக்கூடிய விடயமாகும்.

**கேள்வி:**

**தற்போது தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. வேட்புமனு தாக்கல் செய்த பல தமிழ்க் கட்சியினர் இருக்கின்றனர். இப்படி பல கட்சியினர் இருப்பதால் தமிழ் மக்களுக்கு அல்லது தமிழ் வேட்பாளர்களுக்கு எவ்வாறான பாதிப்பு ஏற்படுகின்றது?**

**பதில்:**

பல கட்சிகள் வந்தாலும் எந்தக் கட்சிகள் எந்த செயற்பாட்டை முன்னெடுக்கப் போகின்றனர் என்று மக்களுக்குத் தெரியும். மக்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு வந்து விட்டது. எமது மக்களை தொடர்ச்சியாக ஏமாற்ற முடியாது. தமது வாக்குகள் சிதறடிக்கப்படாத ஒரு தெரிவை மக்கள் எடுப்பார்கள்.

கடந்த காலங்களில் என்ன செய்வதென்று அறியாமல் கண்மூடித்தனமாக கூட்டமைப்பை ஆதரித்துச் சென்ற நிலைமை தற்போது இல்லை. தற்போது புதிதாக வாக்காளர்களாக இருக்கும் இளைஞர்கள் யுவதிகள் மத்தியில் மிகவும் தெளிவான சிந்தனை உள்ளது. எனவே வெற்றி பெறுபவர்களுக்கு வாக்குகளை அவர்கள் வழங்குவார்கள் என்று நாங்கள் நம்புகின்றோம். செல்லுபடியற்ற வாக்குகள் எங்களின் ஓரிரு ஆசனங்களை இல்லாது செய்து விடுமோ என்ற அச்சம் உள்ளது. ஆனால் மக்கள் எந்த வேட்பாளர் மக்களுக்கு ஆதரவாக விலைபோகாது நிற்பார்கள். தெரிவு செய்து அவர்களை ஆதரிப்பார்கள்.

**கேள்வி:**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த காலங்களில் எவ்வாறான தவறுவளை விட்டிருக்கின்றது. அதனை உங்களின் கட்சி எவ்வாறு எதிர் கொள்ளப் போகின்றது? புதிதாக ஏதாவது தீர்மானங்கள், திட்டங்கள் உங்களிடம் உள்ளதா?**

**பதில்:**

நாங்கள் வடக்கில் இன அழிப்பு பிரேரணையை கொண்டு வரும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சம்பந்தன் உட்பட தமிழரசுக் கட்சி முழுமையாக தனது எதிர்ப்பை வெளியிட்டது. அது மட்டுமல்ல இன அழிப்பு நடந்ததற்கு சர்வதேச விசாரணை வேண்டும் என நாங்கள் எழுப்பிய தீர்மானம் தான் விக்னேஸ்வரனுக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையில் முரண்பாட்டைத் தோற்றுவித்தது. அது நம்பிக்கையில்லாப் பிரேரணை வரை கொண்டு வந்தது. மக்களின் தேவைகளை வடக்கில் நாங்கள் செய்ய முடியாது ஆளும் தரப்பிற்குள்ளேயே எதிர்த்தரப்பு ஒன்றை தமிழரசுக் கட்சி உருவாக்கியது. தங்களின் சொந்த பிரதிநிதிகளுக்கே இவ்வாறான ஒரு செயற்திட்டத்தை முன்னெடுத்தது.

இதைவிட ஐ.நா. சபையில் இரண்டு வருட கால நீடிப்பு வழங்க வேண்டும் என்று அரசிற்கு ஆதரவு தெரிவித்ததும் இதே தமிழரசுக் கட்சியும் இந்தக் கூட்டமைப்பும் தான். மக்களின் விருப்பங்கள் ஒன்றாக இருந்த போது தேர்தல் காலத்தில் அவர்களிடம் ஆணையைப் பெற்றது. விஞ்ஞாபனம் ஒன்றாகவும் நடவடிக்கை வேறாகவும் அமைந்தது. குழப்பமான காலகட்டத்தில் இவர்கள் ஐ.தே.க.க்கு ஆதரவு தெரிவித்தனர். இது அவர்களின் சுயநல அரசியல் இலாபமாக இருந்தது. ஜனாதிபதி தேர்தலின் போது எந்தவொரு நிபந்தனைகளையும் விதிக்காது பல்கலைக்கழக மாணவர்களின் 13 அம்சக் கோரிக்கையைக் கூட செல்லுபடியற்றதாக்கி பல்கலைக்கழக மாணவர்களையும் புத்திஜீவிகளையும் உதாசீனப்படுத்தியது. மேலும் பலவற்றை கூறிக்கொண்டே போகலாம்.

மேலும் தேர்தல் காலங்களில் விடுதலைப் புலிகளின் பாடல்களை ஒலிக்க விட்டு பிரபாகரனின் படத்தை தாங்கி வாக்கு கேட்டுவிட்டு இப்போது விடுதலைப் புலிகள் தங்களுக்கு குண்டு வைக்க வந்தார்கள் என்று கூறி கைதான அப்பாவி இளைஞர்களையும் நாங்கள் பார்க்கின்றோம். இவர்கள் மீண்டும் தேர்தல் வரும் போது இதையே மீண்டும் செய்யும் ஒரு போலி அரசியலை நாங்கள் கண்டிருக்கின்றோம்.

இவர்கள் விட்ட குறைகளை நாங்கள் விடக்கூடாது என்ற தெளிவுடன் இருக்கின்றோம். நாங்கள் மக்களுடன் பேசி அவர்களின் கருத்துக்களை கேட்டு அதையே மேற்கொள்ளும் அரசியலை நாங்கள் செய்யவுள்ளோம்.

**கேள்வி:**

**அண்மையில் நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் நீங்கள் கலந்து கொண்டிருந்தீர்கள். அது தொடர்பாக என்ன கருத்துக்களைக் கூற விரும்புகின்றீரகள்?**

தொடர்ச்சி 8ம் பக்கம்

# கொரோனா வைரஸின் கீழ்

## கொதித்துக் கனத்துச் சூடேறும் கேள்வி

**கோ.ரூபகாந்**

கொரோனா வைரஸ் பரவல் ஒரு நெருக்கடி நிலைமையே தவிர அவசரகால நிலைமை அல்ல என்பதே ஜனாதிபதி கோத்தாபாயாவின் நிலைப்பாடு, ஆனால் நெருக்கடி நிலைமையையும் கடந்து, ஓர் அவசரகால நிலைமையை நாடு எட்டியுள்ளது. நாட்டில் பிறப்பிக்கப்பட்டுள்ள தொடர்ச்சியான ஊரடங்கு உத்தரவு இதனை மிகத் தெளிவாக வெளிப்படுத்தி உள்ளது.

ஆயுத முரண்பாட்டுக் காலத்தில் நாட்டு மக்கள் இதுவரையில் கண்டனுபவித்த ஊரடங்கு சட்ட நடவடிக்கையைவிட இப்போதைய ஊரடங்கு உத்தரவு வித்தியாசமானது. கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ் மக்கள் மத்தியில் தொற்றிப் பரவுவதைத் தடுக்கும் வகையில் மக்களுடைய நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனினும் இப்போதைய ஊரடங்கு சட்ட நடைமுறையில் காரணமின்றி வீதிகளில் உலாவுபவர்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. எனினும் ஊரடங்கு வேளையில் தகுந்த காரணமின்றி வீதிகளில் நடமாடிய 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களைப் படையினர் கைது செய்துள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. கொரோனா வைரஸின் தொற்றிப் பரவும் வேகம் உலகளாவிய ரீதியில் ஒன்றரை மில்லியனைக் கடந்து முன்னேறிக் கொண்டிருக்கின்றது. உலகளாவிய உயிரிழப்பு எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்தாலும்கூட கொரோனாவின் கோர உயிர்ப்பலிப் பசி அடங்கமாட்டாது போலத் தெரிகின்றது. எங்கே பரவும், யார் மீதும் தொற்றிக் கொள்ளும் என்பதற்கு அடையாளமாகவே ஸ்பெயின் தேசத்து போபன் பார்மா அரச குடும்பப் பரம்பரையைச் சேர்ந்த இளவரசி மரியா தெரேஸா கொரோனா வைரஸ் காரணமாக மரணமடைந்துள்ளார். பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்ஸன் கொரோனா வைரஸ் நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகி உடல் நிலை பாதிக்கப்பட்டதனால் அவசர சிகிச்சைக்கு ஆளாகி தேறி வருகின்றார். கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக பல நாடுகள் அவசர நிலைமைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றன. ஆனால் சின்னஞ்சிறு தீவாகிய இலங்கையில் கொரோனா வைரஸ் நோய்த்தாக்கம் ஒரு நெருக்கடி நிலையாக மாத்திரமே கணிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நோய்த்தாக்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள சமூகமய தனிமைப்படுத்தலுக்காக நாட்டின் செயற்பாடுகள் அனைத்தும் முடக்கப்பட்டிருக்கின்றன. முழுமையான கதவடைப்பு செய்யப்பட்டிருக்கின்றது. இதனால் தொழில் துறை நடவடிக்கைகள், அரச தனியார் அலுவலகச் செயற்பாடுகள், ஆட்சி நிர்வாகச் செயற்பாடுகள், பொதுப் போக்குவரத்து போன்ற அனைத்து அத்தியாவசிய தேவைகளும் முடங்கியிருக்கின்றன. நாடு மோசமான பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கின்றது. பங்குச் சந்தைச் செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்திருக்கின்றன. அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை நாணயத்தின் பெறுமதி மிக மோசமாக வீழ்ச்சி அடைந்துள்ளது. யுத்த காலத்திலும், யுத்தத்திற்குப் பின்னரான தேசத்தின் புனரமைப்புக் காலத்திலும் ஏற்பட்டிருந்த செலவினங்களுக்காகப் பெற்றிருந்த கடன்களை உரிய தவணையில் செலுத்த முடியாத கஸ்டமான நிலைமைக்கு நாடு ஆளாகியுள்ளது. இதனால்தான் புலம் பெயர்ந்துள்ள அந்நியச் செலவாணி நிலைமையை சீராக்குவதற்கு புலம்பெயர்ந்துள்ள இலங்கையர்களிடம் கையேந்தி தாயகத்திற்குப் பணம் அனுப்பி வைக்குமாறு அரசு கோரிக்கை விடுத்திருக்கின்றது. அத்தியாவசிய தேவைகள் உள்ளிட்ட அனைத்துத் தேவைகளுக்கும் அனேகமாக அந்நிய தேசங்களை நம்பியிருக்கின்ற இலங்கை கொரோனா வைரஸ் ஏற்படுத்தியுள்ள தாக்கம் காரணமாக பிற தேசங்களிடம் இருந்தும் நட்பு நாடுகளிடமிருந்தும் உதவிகளைப் பெற முடியாத நிலைமைக்கு உள்ளாகி வருகின்றது. கொரோனா வைரஸ் நோய் காரணமாக எழுந்துள்ள பேரிடரினால் உற்பத்திச் செயற்பாடுகளையோ அல்லது தொழிற்துறைச் செயற்பாடுகளையோ உடனடியாகச் செயற்படுத்த முடியாத நிலைமையில் நாடு தத்தளித்துத் தடுமாறிக் கொண்டிருக்கின்றது. தேசிய பொருளாதார நிலைமைகள் இவ்வாறிருக்க, நாட்டின் அரசியலும் ஸ்திரமற்றதொரு நிலைமையிலேயே தள்ளாடிக் கொண்டிருக்கின்றது. முக்கியமாக 2015ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலையடுத்து உருவாக்கப்பட்ட நாடாளுமன்றம், அதன் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே அரசியலமைப்பு விதியொன்றிற்கு அமைவாக நாலரை ஆண்டுகளில் கலைக்கப்பட்டுள்ளது. இந்தத் தருணத்தில்தான் சுனாமி பேரலையின் பேரனர்த்தத் தாக்குதலைப் போன்று கொரோனா வைரஸ் நோய்த்தாக்கம் என்ற கண்ணுக்குத் தெரியாத பேரிடர் நாட்டைத் தாக்கியுள்ளது. நாட்டு நிலைமைகள் இதனால் தலைகீழாகப் புரண்டு கிடக்கின்றன.



நாட்டின் சகல செயற்பாடுகளும் முடக்கப்பட்ட நிலையில் அநேகமான மக்கள் அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது என்ற நிச்சயமற்ற நிலைமைக்கு முகம் கொடுத்திருக்கின்றார்கள். ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு வீடுகளில் முடங்கி இருக்கின்ற நிலைமை இன்னும் எத்தனை நாட்களுக்கு நீடிக்கும் என்பதை அறியாதிருக்கின்றனர். அரசாங்கமும் கூட இந்த சமூக முடக்கலை அல்லது முழுக்கதவடைப்பை எப்போது நீக்க முடியும் என்பதைத் தீர்மானிக்க முடியாத கையறு நிலைமைக்கு ஆளாகி இருக்கின்றது. இருநூறை நோக்கி கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை நகர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் 42ஆயிரம் பேர் கொரோனாவுடன் தொடர்புடையவர்களாகவும் இவர்களை இருவாரங்களுக்குள் அடையாளம் கண்டு உரிய மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்றும் அரச மருத்துவர் சங்கத்தின் செயலாளர் ஹரித அலுத்கே அதிரடியாகத் தெரிவித்துள்ளார். இரண்டு வாரங்களுக்குள் இந்தப் பரிசோதனைகள் நடத்தி முடிக்கப்படாவிட்டால் நிலைமைகள் மோசமடையலா ம். நாட்டின்சுகாதாரக்கட்டமைப்பு பாதிக்கப்படலாம் என்றும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

தற்போதைய நிலையில் ஏப்ரல் மாத முடிவு வரையில் அதிக எண்ணிக்கையானவர்கள் கொரோனா நோய்க்கு ஆளாக நேரிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டின் சுகாதாரப் பொறிமுறையின்படி ஒரு தடவையில் 2000 கொரோனா நோயாளிகளையே கையாள முடியும் என்று அரச மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். திடீரென கொரோ னா நோய்த்தொற்றின் வேகம் அதிகரித்து நோயா ளர்களின் எண்ணிக்கை கூடுமானால் நிலைமைக்கு சுகாதாரத் துறையினர் முகம் கொடுப்பது மிகவும் கடினமான காரியமாகி விடும் என்றும் மருத்துவர்கள் கருதுகின்றார்கள். இதனால் மிக வும் முக்கியமான இந்தக் காலப்பகுதியில் நாட்டு மக்கள் மிகமிக அவதானமாகச் செயற்பட வேண் டும். தனிமைப்பட்டிருத்தலிலும் சமூகமாகத் தனிமைப்பட்டிருத்தலிலும் கூடிய கனமும் அக்கறையும் கொண்டு செயற்பட வேண்டும் என்று நாட்டு மக்களுக்கு அரசும் அரச அதிகாரிகளும் மருத்துவத் துறையினரும் தீவிரமாக வலியுறுத்தி வருகின்றனர். கொரோனா அச்சுறுத்தல் தணியும் வரையில் ஊரடங்கு உத்தரவும் மக்கள் நடமாட்டத்திற்கான தடையும் அகற்றப்படமாட்டாது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன மறுபுறத்தில் தெரிவித்துள்ளார். இத்தகைய பின்னணியில் தான் நாட்டில் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்ற கருத்தை ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நிலைமைகள் எப்படி இருந்தாலும் பொதுத் தேர்தலை நடத்தியாக வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர் உறுதியாக இருக்கின்றார். ஆனால் தேர்தலை எப்போது நடத்துவது என்பதைத் தீர்மானிக்க முடியாமல் தேர்தல் ஆணையகம் தடுமாறிக் கொண்டிருக்கின்றது. இந்த சிக்கலான நிலைமையில் என்ன செய்வது என்பது குறித்து உச்ச நீதிமன்றத்திடம் கருத்தறிய முடியாது என்று கருதப்படுகின்றது. ஏனெனில் முன்னைய ஆட்சியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாலரை ஆண்டுகள் கழிவதற்கு முன்பே நாடாளுமன்றத்தைக் கலைத்து அதன் மூலம் நாட்டைக் குழப்பி இருந்தார். அவருடைய நடவடிக்கைக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணைகளின் போது, நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் நாலரை ஆண்டுகளில் கலைப்பதற்கான ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களின் தன்மை குறித்து அக்கு வேறு ஆணிவேறாக நீதிமன்றம் பறைசாற்றி இருந்தது. அரசியலமைப்புச் சட்டவிதிகளுக்கு உட்பட்ட வகையிலேயே நீதிமன்றம் கருத்துரைக்க முடியும். அரசியல் நடவடிக்கைகளுக்கு எவ்வாறு அரசியலமைப்புச் சட்டங்கள் வழிகாட்டுகின்றனவோ அதே போன்றுதான் நீதிமன்றத்திற்கு அரசியலமைப்புச் சட்டங்களும் ஏனைய துறை சார்ந்த சட்டங்களும் வழிகாட்டுகின்றன. அந்த வழிகாட்டலுக்கு அமைவாக அந்தச் சட்டவிதிகளைக்கு அமைவாகவே நீதிமன்றங்கள் தீர்ப்பளிக்க முடியும். குறித்து வினவப்படுகின்ற விடயங்கள் குறித்து உச்ச நீதிமன்றம் சட்ட ரீதியான பொருள் கோடலைத் தெரிவிக்க முடியும். இப்போதுள்ள நிலைமையில் பொதுத் தேர்தலை நடத்த முடியாவிட்டால் என்ன செய்வது என்பதே பிரதான கேள்வியாகும். பொதுத் தேர்தல் ஒன்றை நடத்த முடியாத ஒரு சூழலில் நாடு நெருக்கடி நிலையொன்றில் சிக்கியுள்ள நிலையில் இந்தக் கேள்வி கொரோனா நோய்த் தொற்றிய பின்னர் ஏற்படுகின்ற காய்ச்சல் - நிமோனியா காய்ச்சல் போன்று கொதித்துக் கனத்து சூடேறிக் கொண்டிருக்கின்றது. இதனால் ஏற்கனவே நெருக்கடியான நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ள நாடு ஓர் அவசரகால நிலைமைக்குள் அணு அணுவாகவும் விரைவாகவும் மூழ்கிக் கொண்டிருப்பதையே உணரவும் காணவும் முடிகின்றது.

• • •

# மோடியினால் நிறைவேற்ற முடியாத தூய்மை இந்தியாவை கொரோனா நிறைவேற்றி வருகின்றது

கல்யாணி



உலகம் முழுவதும் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. பல வேறு நாடுகளில் கொரோனா வைரஸின் நோய் பரவலை தடுக்கும் பொருட்டு பொதுமக்கள் ஒன்று கூடுவது முற்றிலுமாக தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் காட்டு விலங்குகள், பறவைகள் என பலவும் தங்களின் வாழ்க்கையை நிம்மதியாக வாழ்ந்து வருகின்றன. மனிதர்கள் உள்ளே வில ங்குகள் வெளியே என்பதற்கமைவாகவே தற்போ தைய நிலை உள்ளது.

எப்போதுமே இயற்கை தனது சமநிலையை மனிதன் குழப்பும் போது, ஏதோ ஒரு அனர்த்தத்தை கொண்டு வந்து தனது சமநிலையைப் பேணுவது வழக்கமாகும். இதே தான் தற்போது உலகம் முழுவதுமே நடந்து கொண்டிருக்கின்றது. இதுவே இந்தியாவிலும் நடைபெறுகின்றது என கூற வேண்டும்.

தற்போது உலகம் முழுவதும் கொரோனா அச்சுறுத்தலிலேயே உள்ளது. இதனால் உலக நாடு கள் பலவற்றில் ஊரடங்கு அமுலில் உள்ளது. இதேபோல் தான் இந்தியாவிலும் கடந்த 24ஆம் திகதி தொடங்கப்பட்ட ஊரடங்கு எதிர்வரும் 29ஆம் திகதி வரையும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதனால் பொது மக்கள் அனைவரும் வீட்டிலேயே முடங்கி உள்ளனர். தொழிற்சாலைகள் மூடப்பட்டு ள்ளன. வீதிகளில் வாகனங்கள் மிகமிகக் குறைவா கவே இயக்கப்படுகின்றது. ஊரடங்கால் இயற்கை மிகவும் மேம்பட்டு வருகின்றது. மனிதனால் செய்ய முடியாத சில விடயங்கள் நிறைவேறியுள்ளன.

இந்தியாவில் உள்ள மிகப் பெரிய நதிக ளான கங்கை, ஜமுனா, காவேரி போன்றவை தூய் மையடைந்து வருகின்றன. கங்கை நதியில் கலக் கும் மாசில், பத்தில் ஒரு பங்கு தொழிற்சாலை கழிவுகளால் ஏற்படுகின்றது. நதிகளில் தண்ணீர் மிக தெளிவாக, சுத்தமானதாக மாறியுள்ளது. இது மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. டெல்லி யை கடந்து செல்லும் யமுனை ஆறும், உத்தர பிரதேசம் வழியாக வாரணாசி உள்ளிட்ட பகுதி களை கடந்து செல்லும் கங்கை ஆறும் மிக தூய்மை யாக உள்ள வீடியோக்கள் இணையத்தில் வைர லாகி வருகின்றன.

கங்கை ஆற்றைத் தூய்மைப்படுத்த 2020 ஆம் ஆண்டிற்குள் ரூ.20,000 கோடி செலவிடப்படும் என்றும், காவிரியை தூய்மைப்படுத்தும் திட்டத் திற்கு மொத்தம் ரூ.11,250 கோடி செலவாகும் என வும் மதிப்பிடப்பட்டிருந்தது. கங்கை ஆற்றில் கலக் கும் மாசுக்களில் பத்து வீதமானவை தொழிற் சாலைக் கழிவுகளாகும். தற்போது தொழிற்சாலை கள் மூடப்பட்டுள்ளதால் கங்கையில் சேரும் கழிவு கள் குறைந்துள்ளன. தற்போது நடைமுறைப்படுத் தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தினால் நதிகள், ஆறுகள் தூய்மையாகி வருகின்றன. தற்போது கங்கை ஆற்றின் நீரில் ஒக்ஸிஜன் அளவும் அதிக ரித்துள்ளது.

இந்நிலை நீடிக்கும் பட்சத்தில் கங்கை நதி முழுமையாக சுத்தம் அடைவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளதாகவும், கங்கை சுத்தமடைந்தால் அதனை நம்பி வாழும் உயிரினங்கள் அழிவில் இருந்து மீண்டு வரும் என்றும் வன உயிரியல் ஆய் வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.



கங்கை மாசுபடும் பிரச்சினை என்பது, சுமார் 1970 முதல் 2014 ஆம் ஆண்டுகள் வரை மிகவும் முக்கியமானதாக கருதப்பட்டது. பிரதமர் நரேந்தர மோடி, வாரணாசியில் போட்டியிடும் போது, கங்கையை தூய்மைப்படுத்தப்படுவது தனது லட்சியம் எனக் கூறினார். மோடி, 2014ஆம் ஆண்டு ஆட்சிக்கு வரும் போது, கங்கை நதி தூய்மைப்படுத்தப்படும் என்றும் அதற்காக பல வேறு முக்கிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும் என்று கூறினார். ஆனால் அவை அனைத்தும் வெறும் பேச்சளவில் மட்டுமே இருக்கிறது என்று எதிர்கட்சிகள் அவரை தொடர்ந்து குற்றம் சாட்டி வந்தது குறிப்பிடத்தக்கது.

நீரின் மாசு குறைந்ததோடு மட்டுமில்லா மல், காற்று மாசடைதலும் கணிசமாக குறைந்துள் ளது. அதனால் தான் 213 கி.மீ அப்பால் இருக்கும் இமயமலையின் சிகரத்தை பஞ்சாபில் இருக்கும் ஜலந்தர் வாசிகள் பார்க்க முடிந்தது.



இத்தனை நாட்களாக காற்று மாசால் சூழ் ந்திருந்த இயற்கை, தற்போது அதன் உண்மை நிலையை மீட்டுக் கொண்டிருக்கின்றது. இதனால் இந்தியா முழுவதும் தூய்மையான காற்று வீசுகி ன்றது.

இதே போல மரீனா கடற்கரையிலும் தூய்மையான காற்று வீசுவதாக குறிப்பிடப்படு கின்றது. அங்குள்ள கூவம் ஆறும் தூய்மையாகும் வாய்ப்பு உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 2004 டிசம்பர் சுனாமியின் போது இந்த ஆறு ஒரு வடி காலாகச் செயல்பட்டதால் சென்னை நகரம் அதிக பாதிப்புக்கு உள்ளாகாமல் தப்பித்தது. சுனாமியின் போது ஆற்றின் கழிமுகப்பகுதியின் அசுத்தம் நீங்கியது. எப்போதும் கறுப்பாக தெரியும் தண்ணீர் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு கண்ணாடிபோல் மின்னியது. ஆனால் சுனாமி முடிந்த சில வாரங்க ளுக்குள் பழைய நிலைக்குத் திரும்பியது. இதே போல் 2015இல் வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட போதும் கூவம் ஆறு தூய்மையானது. ஒரு சில வாரங்களின் பின்னர் மீண்டும் கழிவுகள் நிறைந்த, நாற்றம் எடுக்கும் ஆறாக மாறியது.

இது இவ்வாறிருக்க, நகரங்கள், கிராமங்கள், வீதிகளின் தூய்மை பேணப்படுகின்றது. நாட்டில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள் கௌரவிக் கப்படுகின்றார்கள். அவர்களுக்கு பாத பூசைகூட நடைபெறுகின்றது. தற்போதைய ஊரடங்கு நிலை மையில் தூய்மைப் பணியாளர்களின் பணியே முழுநேரமாக நடைபெறுகின்றது.

மேலும் மாரியில் மழைகள் இல்லாத பிரதேசங்களில் தற்போது கோடை காலத்தில் மழை பெய்கின்றது. இதிலிருந்து நாம் ஒன்றை உணர ந்தாக வேண்டும். தானாக சீரடையும் இயற்கையை மனிதன் மீண்டும் சீண்டாது இருந்தால், நாடும் நலமாக இருக்கும். அதற்கு மக்கள் ஒத்துழைப்பு நல்குவார்களா என்பது கேள்விக்குறியே.

• • •

## சிறீலங்கா அரசின் ... தொடர்ச்சி...

**பதில்:**

ஐ.நா. கூட்டத்தொடருக்கு சென்றிருந்த போது ஐ.நா. சபையில் சில தனிப்பட்ட சந்திப் புகளை நான் ஒழுங்குபடுத்தியிருந்தேன். ஆனால் வழமையாக நாங்கள் பேசும் இடத்தில் மோச மான சக்திகளின் தலையீடு காரணமாக நான் பேச அனுமதிக்கவில்லை. அந்த சக்திகளை நான் மிகவும் ஆபத்தானதாக பார்க்கின்றேன். அது தனி நபராக இருக்கலாம் அல்லது அமைப்பாக இருக்கலாம். அதை இனங்காண முடியவில்லை. இதனால் நான் ஐ.நா. சபையில் பேசவில்லை. அரசியல் தளத்தில் மற்றும் மனித உரிமைகள் தளத்திலிருந்து என்னை நீக்க பல சதி வேலைகள் நடைபெறுகின்றது என்பதை நான் பின்னர் அறிந்தேன்.

ஆனால் எனது பணி தொடரும். எனது கணவனை என் கையால் கொடுத்து விட்டு தேடும் நான் இந்த எல்லா பணியிலும் தோற்றும் ஒருவராக இருக்கின்றேன். நான் ஒரு உயிர் வாழும் சாட்சியம்.

• • •




# உண்மையை உணர்த்திய உலக சுகாதார தினம் 2020

**உலக சுகாதார நிறுவனத்தின் தோற்றம்**

ஆயிரத்து எண்ணூறுகளின் நடுப்பகுதியில் (1859) இடம்பெற்ற பிரெஞ்சு ஆஸ்திரியா யுத்தத்தின் போது இடம்பெற்ற யுத்த வீரர்களின் உயிரிழப்புக்களும் அவலங்களும் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் தோற்றுவாயாக அமைந்தது. எனினும் இவ்வமைப்பு நடுநிலையாக இராணுவ வீரர்களின் நலன் பேணும் அமைப்பாக அமைந்ததன்றி இவ்வகை யுத்தங்களால் பாதிப்புக்குள்ளான மக்களின் சுகாதார நலன்களை பேணும் அமைப்பாக விரிவடையவில்லை. முதலாம், இரண்டாம் உலகப் போர்களின் பரந்துபட்ட தாக்கம் இவ்வகை தேவையை உலகுக்கு உணர்த்தியது. இராணுவ வீரர்களின் நலனுக்காக ஒத்துழைப்பு நல்கும் நாடுகள் மக்கள் நலன்களுக்காகவும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனும் கருத்துரு தோன்றியது. இரண்டாம் உலக போரின் இறுதிக் கட்டத்தில் உலகெங்கும் நிகழ்ந்த போரினாலான மனித உயிர்களின் இழப்புக்களையும், உடமை, வளங்கள் மற்றும் பொருளாதார இழப்புக்களையும், தொடரான தொற்று நோய்களின் தாக்கங்களையும் கருத்தில் கொண்டு உலக நாடுகளின் உயர்மட்ட குழுவின் பரிந்துரையின் பெயரில் 1945இல் ஒரு உலக சுகாதார நிறுவனத்தின் தேவை வலியுறுத்தப்பட்டு, அதே ஆண்டு ஏப்ரல் 7ஆம் திகதி உலக சுகாதார நிறுவனத்திற்கான இறுதி வரைபு செயலுரு பெற்றது. இது ஐக்கிய நாடுகள் அவையின் தோற்றத்திற்கு ஆறு மாதங்களின் முன் இடம் பெற்றது. ஐக்கிய நாடுகள் அவையின் தேவையை வலியுறுத்தியதும் பல்வேறு நாடுகளை இக்கருத்துருவாக்கத்திற்கு செவிசாய்க்க வைத்ததும் எண்ணற்ற மனித உயிர்களின் இழப்பு தான் என்றால் மிகையாகாது. அந்த வகையில் உலக சுகாதாரத்தின் அடிப்படையிலேயே மனிதாபிமான கருத்துருவாக்கம் பிறந்தது என கொள்ளலாம்.

**உலக சுகாதார தினம்**

உலக சுகாதார நிறுவனத்தின் ஒழுங்கமைப்பு கோவை நடைமுறைக்கு வந்த ஏப்ரல் 7ஆம் திகதி ஆண்டு தோறும் உலக சுகாதார நாளாக கடைப்பிடிக்கப்படுகிறது. இந்நாளில் வருடம் தோறும் உலக சுகாதாரம் சார்ந்து கவனிக்கப்பட வேண்டிய ஒரு கருப்பொருள் தேர்ந்து எடுக்கப்பட்டு, அக்கருப்பொருளினை அடைவதற்கான இலக்குகளும், செயற்றிட்டங்களும் வகுக்கப்பட்டு உலக நாடுகள் எங்கும் அவற் றை நடைமுறைப்படுத்த வலியுறுத்தப்படுவதுடன் அதற்கான அடிப்படை தொழில்நுட்ப ஆலோசனைகளும் உலக சுகாதார நிறுவனத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகையில் இவ்வாண்டு மருத்துவ மாதுக்களையும், தாதியர்களையும் போற்றும் வகையிலும் அவர் தம் சேவைகளை மேன்மைப் படுத்தும் வகையிலும் உலக சுகாதார தினத்தை அனுசரிக்குமாறு உலக சுகாதார நிறுவனம் வேண்டிக் கொண்டது. எனினும் புதிய கொரோனா தொற்றின் உலகளாவிய பரம்பலும் இழப்பும், தாதியர்களையும் மருத்துவமாதுக்களையும் போற்றி மேன்மைப்படுத்த முடியாத அளவுக்கு உலகெங்கும் ஓர் அவசரகால நிலைமையை தோற்றுவித்துள்ளது. அவர்களை மேன்மைப்படுத்த வேண்டிய நாளில், மென்மேலும் அதிகரித்த வேலைப்பளுவை சுமக்க வேண்டிய, தம் உயிர்களை காவு கொடுக்க வேண்டிய அவல நிலை தான் உலக நாடுகள் அவர்க ட்கு வழங்கி யிருக்கிறது.

**காருண்யா**

**உலக சுகாதார நிறுவனத்தின் இலக்குகளும் அடைவும்**

கடந்த 75 வருடங்களில் உலகளாவிய பல தொற்று நோய்களை முற்றாக ஒழித்தமை, பல நோய்களின் தாக்கங்களை குறைத்தமை. "அனைவருக்கும் சுகாதாரம்" எனும் இலக்கில் ஓரளவு வெற்றி கண்டமை என்பன உலக சுகாதார நிறுவனத்தின் வெற்றிகளாக கொள்ளலாம். இதனை மறுதலிப்பவர்களுக்கு இன்றைய புதிய கொரோனா தொற்றும் அதன் தாக்கமும் ஓர் சான்றாக அமைகிறது. உலக சுகாதார நிறுவனத்தின் அதீத செயற்பாடுகள் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட, பின்தங்கிய மற்றும் வளர்முக நாடுகளையே முதன்மைப்படுத்தி அமைந்துள்ளது. உலக சுகாதார நிறுவனம் ஐந்தாண்டு வேலைத்திட்டங்களை உருவாக்கி செயற்படுத்தி வருவதுடன் ஆண்டு தோறும் கூடி அவற்றின் முன்னேற்றம், தடங்கல்கள் என்பவற்றை ஆராய்ந்து மாற்றங்களை ஏற்படுத்தி இலக்குகளை நோக்கி நகர்கிறது. அவ்வகையில் வரையப்பட்ட 13ஆவது வேலைத்திட்டம், ஒரு பில்லியன் மக்களுக்கு சுகாதார வசதிகளை மேம்படுத்தல், ஒரு பில்லியன் மக்களின் நல வாழ்வை உறுதிப்படுத்தல், ஒரு பில்லியன் மக்களை சுகாதார அவசர நிலைமைகளில் இருந்து பாதுகாத்தல் எனும் இலக்குடன் 2019 முதல் 2023 வரையான காலப்பகுதிக்கான இலக்குகளை வரையறுத்து செயற்றிட்டங்களை ஆரம்பித்தது.

**2019 புதிய கொரோனாவும் உலக நாடுகளின் தயார் நிலையும்**

பதின்மூன்றாம் செயற்றிட்டத்தின் கீழ் பின்தங்கிய நாடுகளின் அவசர சுகாதார சேவைகளை மேம்படுத்தல், சமூக மற்றும் ஆரம்ப சுகாதார கட்டமைப்புகள் ஊடாக அவசர நிலைமைகளை கையாளுதல் போன்ற முன்னைய செயற்றிட்டங்களுக்கு மென்மேலும் ஊக்குவிப்பு வழங்கப்பட்டது. சீனாவில் புதிய கொரோனா தொற்று தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டு 10 நாட்களில் உலக நாடுகளுக்கான தற்காலிக வழிகாட்டல் அறிவுறுத்தல்களை உலக சுகாதார நிறுவனம் வழங்கியது. அவற்றுடன் 2005ஆம் ஆண்டின் சர்வதேச சுகாதார நெறிமுறை கோவையை முழுமையாக பின்பற்று மாறு உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மேலதிகமாக பின்தங்கிய நாடுகளுக்கான நோய் கண்காணிப்பு பொறிமுறை, ஆய்வுகூட பரிசோதனை திரவங்கள், தற்காப்பு அங்கிகள் என்பவற்றை சிறு அளவுகளில் தயார் நடவடிக்கைகளுக்காக வழங்கியது.

அவ்வகையில் பல்வேறு நாடுகள் தம் முன் னெச்சரிக்கை நடவடிக்கைகளை முடுக்கி விட்டதுடன், உலக சுகாதார நிறுவனம் தினம் தோறும் நாடுகளின் பிரதிநிதிகளூடாக தயாரிப்பு நடவடிக்கைகளை கண்காணித்தும் ஊக்கப்படுத்தியும் வந்தது. நிலைமை மோசமடைந்த போது இந்நோயை உலக சுகாதார அவசர நிலைக்கான நோயாகவும் பின்னர் உலகளாவிய தொற்றாகவும் அறிவித்ததுடன் அவ்வவ் நிலைமைகளுக்கான செயற்பாடுகளை 2005ஆம் ஆண்டின் சர்வதேச சுகாதார நெறிமுறை மற்றும் புதிய அணுகுமுறைகளுக்கூடாக கையாளுமாறு அறிவுறுத்தியது.

**தடுமாறும் மேற்குலகும் தயாரான வறிய நாடுகளும்**

இவ்வறிவுறுத்தல்களை பின்தங்கிய நாடுகள் பின்பற்றிய அளவுக்கு முன்னேறிய நாடுகள் பின்பற்றவில்லை என்பது நோயின் தாக்கம் உலகளாவிய ரீதியில் பரவிய போது தெரிய வந்துள்ளது. உதாரணமாக இன்று கொரோனாவின் தாக்கம் ஐரோப்பா, அமெரிக்கா, மேற்கு பசிபிக் பிராந்தியம், மத்திய கிழக்கு பிராந்தியம், ஆபிரிக்கா எனும் ஒழுங்கில் பாதிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

இந்நிலைமைக்கு என்ன காரணம்? உலக சுகாதார நிறுவனம் அதிகளவு கவனம் எடுத்து கொண்ட நாடுகளில் பரவல் குறைவாகவும் அபிவிருத்தி அடைந்த நாடுகள் தம் சுகாதார மேம்பாடுகளில் தாமே கவனம் எடுத்துக் கொள்கின்றன அவர்களால் அதனை எதிர்கொள்ள முடியும் எனும் தவறுதலான புரிதலும். நோயின் தாக்கம், பரவல், விளைவுகள் என்பன சரியாக கணக்கிடப்படாமையும், எமது சுகாதார திட்டங்கள் இவ்வகை தாக்கங்களை எதிர்கொள்ளும் வல்லமை உடையனவா என்ற பரீட்சித்தல் இல்லாமையும், எல்லாவற்றிற்கும் மேலாக மெத்தன போக்கும் இன்றைய அவல நிலையை மேற்குலகிற்கு தோற்றுவித்திருக்கின்றன.

இன்று மட்டுமல்ல உலகளாவிய கொள்ளை நோய், ஸ்பானிய காய்ச்சல் மற்றும் 2009 பறவை காய்ச்சலின் போதும் உலக சனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கே உள்ள மேற்குலகே அதிகளவில் பாதிக்கப்பட்டது, எயிட்ஸ் தொற்றில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது.

எனவே இயற்கையை மறுதலித்து, உலகளாவிய மனிதகுல மேம்பாட்டை புறந்தள்ளி, போரினாலும் பொருளாதார மற்றும் ஆயுத அச்சுறுத்தலாலும் உலக நாடுகளை ஆள முனையும் மேற்குல கிற்கும் மனித குலத்திற்கும் இயற்கை மீண்டும் ஓர் அறிவுறுத்தலை வழங்கியுள்ளது. இதனை மேலாதிக்க சக்திகள் கருத்தில் கொள்ளுமா? காத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

• • •



# மானுடத்தின் எசமான்கள்

**பாகம் 01**

தமிழில் ந. மாலதி

உலக அரசியலை புரிந்து கொள்வது சிக்கலானது. பல்கலைக்கழகங்களில் அரசியல் அறிவியலை ஒரு கோணத்தில் கற்பிக்கிறார்கள். அதிகார மையங்களுக்கு ஒவ்வாத கருத்துக்களை இங்கு கற்பிப்பதில் சிக்கல்கள் உள்ளன. ஒரு சில ஆசிரியர்கள் இதையும் மீறி தங்களுக்கு உண்மை என்று தோன்றுவதை கற்பிக்கிறார்கள். இவர்களை போன்றவர்கள் பல்கலைக்கழகங்களில் அதிகம் இல்லை. பேராசிரியர் நோம் சொம்ஸ்கி பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் கற்பிப்பவர் அல்ல. ஆனால் மாணவர்களுடன் பல தசாப்தங்களாக அரசியலை பேசி வருபவர். உலக அரசியலை இவரிடமிருந்து கற்றுக்கொள்வதையே பல பிரபல சிந்தனையாளர்களும் ஏற்றுக் கொள்கிறார்கள். மேலே குறிப்பிட்ட தலைப்பில் பேராசிரியர் நோம் சொம்ஸ்கி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். இதில் இன்றைய உலக அரசியல் பற்றி ஒரு அறிமுகம் தருகிறார். இன்றைய மானுடத்தின் எசமான்கள் யார், இந்த எசமான்களுக்கு இன்று சவாலாக இருப்பவர்கள் யார் என்பதை பற்றி இதில் பேசுகிறார். இவர் கூறிய கருத்துக்கள் பின்வரும் ஐந்து பிரிவுகளாக வெளியிடப்படுகிறது.



1) மேற்குலக அதிகாரத்திற்குள்ள அழுத்தங்கள்,
2) இன்றைய கிழக்கு-ஆசிய சவால்கள்,
3) இன்றைய கிழக்கு-ஐரோப்பிய சவால்கள்,
4) இன்றைய இஸ்லாமிய-உலக சவால்கள்,
5) இரண்டாவது சக்தி என்பனவே இவை.

**மேற்குலக அதிகாரத்துக்குள்ள அழுத்தங்கள்**

"யார் உலகை ஆளுகிறார்கள்" என்று கேட்டால் நாம் வழமையாக கையாளும் முறையில், அரசுகளையும், முக்கியமாக வல்லரசுகளையும், அதன் முடிவுகளையும், அவற்றிற்கிடையிலான உறவுகளையுமே கணக்கிலெடுக்கிறோம். அது முற்றிலும் பிழையில்லை. இருந்தாலும் இவ்வாறு சுருக்கி பார்ப்பதால் நாம் பிழையான விளக்கங்களை ஏற்றுக்கொள்ளும் சாத்தியங்கள் உண்டு என்பதையும் மனம் கொள்ளல் வேண்டும்.



அரசுகளுக்குள்ளேயும் சிக்கலான கட்டமைப்புகள் இருக்கும். இதன் அரசியல் தலைமைத்துவங்கள் எடுக்கும் முடிவுகளில் அரசுகளுக்குள்ளே இருக்கும் அதிகார பலமுள்ள மையங்கள் அதிக தாக்கம் செலுத்தும். பொது மக்கள் பெரும்பாலும் ஓரங் கட்டப்படுவார்கள். சனநாயகத்தை மதிக்கும் நாடுகளுக்கும் இது பொருந்தும். சனநாயக தன்மைகள் குறைந்த நாடுகளில் இது மேலும் பொருந்தும். மானுடத்தின் எசமான்கள் உண்மையில் யார் என்பதை புறந்தள்ளி உலகை யார் ஆளுகிறார்கள் என்பது பற்றிய உண்மையான புரிதலை நாம் பெற்றுக் கொள்ள முடியாது.

அடம் சிமித் என்ற பொருளாதார நிபுணர் அவருடைய காலத்தில் (1723-90), மானிடத்தின் எசமான்களை உற்பத்தியாளர்களும் பெரும் விற்பனையாளர்களும் என்று விபரித்தார். இன்றைய காலத்தில் இவர்களை பெரும் பல்தேசிய கம்பனிகளும், பெரும் நிதி நிறுவனங்களும், பெரும் விற்பனை மையங்களும் என்று விபரிக்கலாம். அன்று அடம் சிமித் சொல்லிய மானுடத்தின் எசமான்களின் தாரக மந்திரம் தான் "எல்லாம் எங்களுக்கே. மற்றவர்களுக்கு எதுவுமில்லை" என்பது. வேறு வார்த்தையில் சொல்வதானால் இதுவே ஒரு பக்க சார்பான வர்க்கப் போர்.

நாட்டுக்கும் உலகத்திற்கும் கெடுதல் விளைவிப்பது. இன்றைய உலக ஒழுங்கில், மானுடத்தின் எசமான்களின் அமைப்புக்கள் அதீத செல்வத்தையும் அதனால் வரும் அதிகாரத்தையும் கொண்டுள்ளன. செல்வம் சிலரிடம் மட்டும் குவிமையப்படுத்தப்படும் போது சனநாயகம் கருத்தற்று போவகிறது. உலகளாவிய ரீதியில் மட்டுமல்ல உள்நாட்டிலும் இவ்வாறே. இந்த அதிகாரத்தை கொண்டே அவர்கள் தங்கள் அதிகாரத்தை தக்க வைத்து கொள்கிறார்கள். பல வழிகளில் தங்கள் பொருளாதார பலத்தையும் பாதுகாத்து கொள்கிறார்கள்.

சர்வதேச விடயங்களில் ஒரு அரசின் கொள்கையில் தாக்கம் செலுத்துபவைகளை அலசுவதற்கு கணக் கிலெடுக்க வேண்டியவை பற்றி இன்னும் பல வற்றை சொல்லலாம். இருந்தாலும் ஏறத்தாள உண்மைக்கு அண்மையான ஒரு மதிப்பீட்டிற்கு அரசுகளையே அதிகார மையங்களாக கருதி அலசு வோம். அப்படி பார்த்தால் யார் உலகை ஆளுகி றார்கள் என்ற கேள்வியை ஆராயும் போது சில விடயங்கள் உடனடியாக எம்முன்னே வந்து நிற்கும். ஐ-அமெரிக்காவுக்கும் இன்றைய உலக ஒழுங்கிற்கும் சவாலாக ஏழும்பும் சீனா, கிழக்கு-ஐரோப்பாவில் உருவாகி வரும் புதிய பனிப்போர், பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போர், ஐ-அமெரிக்க மேலாதிக்கமும் அதன் வீழ்ச்சியும் இவற்றில் முக்கிமானவை.

பெரிய லண்டன் பத்திரிகை ஒன்றின் நிருபரான கிடியன் ரச்மான் (Gideon Rachman) மேற்குலகின் இன்றைய சவால்களையும் உலக ஒழுங்கையும் இவ்வாறு விபரிக்கிறார். "பனிப்போர் முடிவுக்கு வந்த காலத்திலிருந்து ஐ-அமெரிக்காவின் இராணுவ பலமே உலக அரசியலின் மையப்புள்ளியாக இருந்து வந்துள்ளது. மூன்று இடங்களில் இது மிகவும் முக்கியமாக இருக்கிறது. ஐ-அமெரிக்க கடற்படை கிழக்கு-ஆசியாவின் பசுபிக்கடலை தனது சொந்த ஏரிபோல பாவிக்கிறது. ஐரோப்பாவில் நேற்றோ (NATO) – அதாவது அதன் இராணுவ செலவின் முக்கால் வீதத்தை கொடுக்கும் ஐ-அமெரிக்கா – "அதன் உறுப்பு நாடுகளின் எல்லைகளை பாதுகாக்கிறது". மத்திய-கிழக்கில் அமெரிக்காவின் இராட்சத கடற்படை மற்றும் விமானப்படை தளங்கள் அதன் நட்பு சக்திகளுக்கு ஆறுதலாகவும் எதிரிகளுக்கு பயமுறுத்தலாகவும் உள்ளன."

கிடியன் ரச்மான் தொடர்ந்து, "இந்த மூன்று பகுதிகளிலும் இந்த பாதுகாப்பு முறைகளுக்கு இன்று சவால்கள் உள்ளன" என்றார். ஏனெனில் உக்கிரேயினிலும் சிரியாவிலும் ரஷ்யா தலையிட்டிருக்கிறது. சீனாவுக்கு அருகில் உள்ள "அமெரிக்காவின் ஏரியாக" இருந்த கடற்பிராந்தியத்தை சீனா கேள்விக்குள்ளாக்கியிருக்கிறது. ஆகவே அடிப்படை கேள்வி என்னவென்றால், ஏனைய வல்லரசுகளும் தங்கள் தங்கள் பிராந்தியங்களில் தங்கள் பலத்தை நிலைநிறுத்துவதை ஐ-அமெரிக்கா ஏற்றுக் கொள்ள வேண்டுமா என்பதுதான். பொதுப் புத்தியில் பார்த்தாலும், பொருளாதார பலத்தை பரவலாக்கவும் இதை ஐ-அமெரிக்கா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றே



கிடியன் ரச்மான் தனது ஆக்கத்தில் சொல்கிறார்.

உலக ஒழுங்கையும் இப்பிரச்சனையையும் பலகோணங்களில் இருந்து அணுகலாம் என்பது உண்மைதான். ஆனால் இம்மூன்று பிரதேசங் களும் முக்கியமானவை என்பதால் இந்த கோணத்திலிருந்தே இவற்றை அலசுவோம்.

**தொடரும்.....**

# சவுதியின் அரச குடும்பத்தை கதிகலங்க வைத்துள்ள கோவிட்–19



கோவிட்-19 வைரஸ் இனம், மதம், ஏழை, பணக்காரார் என்ற பாகுபாடின்றி தாக்கி வருகின்றது. பிரித்தானியாவின் அரச குடும்பத்தை தாக்கிய வைரஸ் பல நாடுகளின் அரசியல்வாதிகள் மற்றும் வர்த்தகர்களையும் தாக்கியிருந்தது.

அந்த வரிசையில் தற்போது சவுதி அரேபியாவின் அரச குடும்பமும் இணைந்துள்ளது. அரச குடும்பத்தவர்களில் ஏறத்தாள 150 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக நியூயோர்க் ரைம்ஸ் நாளேடு தனது புலனாய்வு தகவல்களை மேற்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

சவுதி தலைநகர் றியாத்தின் ஆளுநரான சவுதியின் அரசர் பைசல் பின் பன்டார் (70) நோயின் தாக்கத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரசர் சல்மான் மற்றும் முடிக்குரிய இளவரசர் மொகமட் பின் சல்மான் ஆகியோர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதே சமயம், அரச குடும்பத்தை பராமரிக்கும் மருத்துவமனையில் புதிதாக 500 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன.

சவுதி அரேபியாவின் ஆயிரக் கணக்கான இளவரசிகள் ஐரோப்பிய நாடுகளுக்கு சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வதால் அவர்களே வைரசை அரச குடும்பத்திற்குள் பரப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அரச குடும்பம் 15,000 உறுப்பினர்களைக் கொண்டது.

33 மில்லியன் சனத்தொகையை கொண்ட நாட்டில் இதுவரை 2,932 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், 41 பேர் இறந்துள்ளனர். மெக்கா, மதீனா போன்ற புனித இடங்களுக்கு மக்கள் செல்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. ஐந்து முக்கிய நகரங்களில் அவசரகால நிலை பிரகடனப் படுத்துப்பட்டுள்ளது. 2 இலட்சம் பேருக்கு நோய் பரவலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனிடையே, 84 வயதாக மூத்த அரச தலைவர் சல்மான் நோயின் தாக்கத்தில் இருந்து தப்பும் நோக்கத்துடன் ஜெட்டாவுக்கு அருகில் உள்ள தீவு ஒன்றுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# பிரித்தானியாவில் பலியான 10 வேற்று நாட்டு மருத்துவர்கள்



கொரோனோ வைரசின் தாக்கம் பிரித்தானியாவில் கடந்த வாரம் முதல் மிகவும் அதிகரித்து வருகின்றது. அங்கு நாள் ஒன்றிற்கு ஏறத்தாள 800 பேர் மரணித்து வரும் நிலையில் பெருமளவான மருத்துவர்களும் மரணமடைந்து வருகின்றனர்.

இதுவரை அங்கு 10 மருத்துவர்கள் மரணமடைந்துள்ளனர். ஆனால் மரணமடைந்துள்ள 10 மருத்துவர்களும் பல நாடுகளை சேர்ந்தவர்களே அன்றி பிரித்தானியர்கள் அல்ல என்பது தான் இங்கு கவனிக்க வேண்டியது.

வங்களாதேசம், எகிப்து, இந்தியா, பாகிஸ்தான், சிறீலங்கா, நைஜீரியா, சிரியா மற்றும் சூடான் ஆகிய நாடுகளை சேர்ந்த மருத்துவர்களே பலியாகியுள்ளனர்.

ஒரு மாற்றத்தை தேடி இந்த நாட்டுக்கு வந்தவர்கள் தற்போது மரணமடைந்துள்ளனர். அவர்கள் தமது உயிர்களை மருத்துவ சேவைக்காக தியாகம் செய்துள்ளனர். அவர்களை நாம் கௌரவிக்க வேண்டும் என பிரித்தானியாவின் சுகாதாரத்துறை செயலாளர் மற் கன்கொவ் தெரிவித்துள்ளார்.

மரணமடைந்தவர்களில் சிலர் ஓய்வுபெற்ற பின்னர் அரசு மேற்கொண்ட அழைப்பை ஏற்று மீண்டும் சேவைக்கு சென்றவர்கள்.

## 101 வைத்தியர்களை இழந்துள்ளது இத்தாலி



கடந்த பெப்ரவரி மாதம் முதல் இத்தாலியில் வேகமாக பரவிய கொரோனா வைரசின் தாக்கத்தில் இருந்து மக்களை காப்பாற்ற பணியாற்றிய வைத்தியர்களில் 101 வைத்தியர்கள் இதுவரை மரணமடைந்துள்ளதாக இத்தாலியின் மருத்துவ அமைப்பு கடந்த வியாழக்கிழமை (9) தெரிவித்துள்ளது.

மரணமடைந்த வைத்தியர்களில் அரசின் அழைப்பை ஏற்று மீண்டும் பணிக்கு திரும்பிய ஓய்வுபெற்ற வைத்தியர்களும் அடங்கியுள்ளனர். மேலும் 30 தாதிகளும் உயிரிழந்துள்ளனர்.

இதற்கு மேலும் நாம் வைத்தியர்களையும், தாதிகளையும் தரமான பாதுகாப்பு உபகரணங்கள் இன்றி முன்னணி நிலைக்கு அனுப்ப முடியாது என அமைப்பின் தலைவர் பிலிப்போ அனிலி தெரிவித்துள்ளார்.

தொற்றுதலுக்கு உட்பட்டவர்களில் 10 விகிதமானவர்கள் சுகாதாரப் பணியாளர்கள் ஆகும். கடந்த சனிக்கிழமை வரையிலும் இத்தாலியில் 18,849 பேர் மரணமடைந்துள்ளதுடன், 147,577 பேர் பாதிக்கப்பட்டுள்ளதான தெரிவிக்கப்படுகின்றது.

# உலக சுகாதார நிறுவனம் மீது அமெரிக்கா கடும் சீற்றம்

கோவிட்-19 வைரசின் மையப்புள்ளியாக அமெரிக்கா தற்போது உருவெடுத்துள்ள நிலையில், அது மிகப்பெரும் இழப்புக்களை சந்தித்து வருகின்றது. தற்போது வரையில் அங்கு 18,771 பேர் மரணமடைந்துள்ளதுடன், 5 இலட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இழப்புக்களால் கடும் சீற்றம் அடைந்துள்ள அமெரிக்கா, தனது கோபத்தை உலக சுகாதார நிறுவனம் மீது திருப்பியுள்ளது. உலக சுகாதார நிறுவனம் உலக நாடுகளை விரைவாக எச்சரிக்க தவறியுள்ளது என அமெரிக்கா குற்றம் சுமத்தியுள்ளது.

சீனாவின் அழுத்தத்தால் தாய்வானை தனது உறுப்பினராக சேர்த்துக்கொள்ளாத நிறுவனம், தாய்வானின் விரைவான எச்சரிக்கையை புறக்கணித்துள்ளது. அதாவது சுகாதாரத்தை விட அரசியலையே நிறுவனம் முன்னிலைப்படுத்தியுள்ளது. எனவே அதற்கான நிதியை அமெரிக்கா வழங்காது என அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் இந்த வாரம் தெரிவித்துள்ளார்.

சுகாதார நிறுவனத்திற்கு அமெரிக்காவே அதிக நிதியை வழங்கி வருகின்றது. கடந்த ஆண்டு அமெரிக்கா 400 மில்லியன் டொலர்களை வழங்கியிருந்தது. ஆனால் சீனா 44 மில்லியன் டொலர்களையே வழங்கியிருந்தது.

இதனிடையே, உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் மீது தாய்வான் மிகவும் கீழ்த்தரமான தாக்குதலை நடத்தி வருவதாகவும், அவருக்கு எதிராக இணையத்தளங்களை பயன்படுத்தி இனவாத கருத்துக்களை பரப்பி வருவதாகவும் சீனா குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும் அமெரிக்கா, மக்களின் நலன்களை விட தனது அரசியலை முதன்மைப்படுத்தி வருவதாகவும், உலக நாடுகள் இணைந்து செயற்படாது விட்டால் நாடுகள் அதிக மரணங்களை சுமக்க வேண்டிவரும் என உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## 16.8 மில்லியன் மக்கள் அமெரிக்காவில் வேலையிழப்பு



கொரோனா வைரஸ் மக்களின் உயிர்களை மட்டும் பறிக்காது அவர்களின் பொருளாதாரத்தையும் கடுமையாக பாதித்து வருகின்றது.

வைரசின் தாக்கத்தை குறைப்பதற்காக பல நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதால் அமெரிக்காவில் மட்டும் கடந்த 3 வாரங்களில் 168 இலட்சம் மக்கள் தமது வேலைகளை இழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதாவது 10 அமெரிக்கர்களில் ஒருவர் பணியை இழந்துள்ளார். 1948 ஆம் ஆண்டு மிகப்பெரும் பொருளாதார நாடாக அமெரிக்கா உருவெடுத்த பின்னர் இடம்பெற்றுள்ள மிகப்பெரும் அனர்த்தம் இதுவாகும். இந்த மாத இறுதிக்குள் வேலையற்றோர் எண்ணிக்கை 20 மில்லியன் ஆக உயரும் என கணிக்கப்பட்டுள்ளது.




# ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் என்ற மருந்து உண்மையில் கொரோனாவை குணப்படுத்துமா?

**நிலவன்** அவுஸ்திரேலியா

உலகம் முழுவதும் 209 நாடுகளுக்கு பரவி மனித பேரழிவை ஏற்படுத்தி வருகின்ற கொரோனா உலகம் முழுவதும் 16 இலட்சத்துக்கு மேற்பட்டவர்களை தாக்கியுள்ளது. ஒரே நாளில் சுமார் 7000இற்கு மேற்பட்டவர்கள் உயிரிழக்கின்றனர். இதன் மூலம் வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தவர் களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை எட்டியுள்ளதுடன் மூன்று இலட்சத்துக்கு அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

மருத்துவமனைகளில் 12 இலட்சத்துக்கு அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 50 ஆயிரம் பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனா என்பது கிட்டத்தட்ட சளிக் காய்ச்சல் போலவே வெளிப்படுகிறது. இதற்கு மருந்து கிடையாது. ஆனால் காய்ச்சல் வரும் போது ஏற்படும் இருமல், மூச்சு விட சிரமம் போன்ற பிரச்சனைகள் கொரோனாவின் போது அதிகம் ஏற்படுகிறது. இதனால் தற்போது காய்ச்சல் மருந்துகள் அதிக முக்கியத்துவம் பெறுகிறது. இதனை ஓரளவு கட்டுப்படுத்த காய்ச்சலுக்கு அளிக்கப்படும் பரசிட்டமோல் மற்றும் வேறு சில மருந்துகள் மருத்துவர்களின் பரிந்துரைகளுடன் பயன்படுத்தப்படுகிறது.

ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் எனும் மருந்தை இந்தியா கொடுக்காவிட்டால் உரிய பதிலடி அளிக்கப்படும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மிரட்டும் தொனியில் பேசியுள்ளதை அடுத்து அந்த மருந்தின் பெயர் தற்போது அதிகமாக பேசப்பட்டு வருகிறது.
உலக அளவில் 70 சதவீத ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது. ஆண்டுக்கு 40 தொன் ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் மருந்தின் மூலக்கூறை தயாரிக்கும் திறன் இந்தியாவில் உள்ளது. இதைக் கொண்டு 200 மில்லிகிராம் அளவு கொண்ட 20 கோடி மாத்திரைகளைத் தயாரிக்க முடியும். மலேரியா, மூட்டுவலி உள்ளிட்ட சிகிச்சையில் இவை மருத்துவரின் ஆலோசனைப்படி பயன்படுத்தப்படுகின்ற மருந்தாகும்.

கொரோனா வைரஸ் நோயாளிகளுக்கு உயிர்காக்கும் மருந்தாக மலேரியாவுக்கு வழங்கப்படும் ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் மாத்திரைகளை வழங்கலாம் என்று இந்திய மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் கடந்த மாதம் பரிந்துரைத்தது. இந்த பரிந்துரைக்குப்பின், இந்த மாத்திரை ஏற்றுமதியை மத்திய அரசு கடந்த மாதம் 25ஆம் தேதி தடை செய்தது.

உண்மையிலேயே இந்த மருந்துக்கு நோய்களை குணப்படுத்தும் திறன் உள்ளதா, தொற்று நோயிலிருந்து மனிதனை காக்கும் அற்புதத்தை நிகழ்த்துமா என பல்வேறு கேள்விகள் எழுகின்றன.

ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் என்பது மலேரியா காய்ச்சலுக்காக பயன்படுத்தப்படும் ஒரு மருந்தாகும். இந்த மருந்து இரண்டாம் உலக போரின் போது கண்டுபிடிக்கப்பட்டது. இது ருமடாய்டு ஆர்த்ரைட்டீஸ் நோய்க்கும் கொடுக்கப்படுகிறது. இந்த அன்டி மலேரியா மருந்தை உட்கொண்டால் தசை மற்றும் மூட்டுகளில் வலி, தோலில் அரிப்புகள், இதயம் மற்றும் நுரையீரல் அழற்சி, காய்ச்சல், சோர்வு ஆகிய அறிகுறிகளை காட்டும் என ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் நாட்டில் 40 கொரோனா நோயாளிகளுக்கு ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் மருந்து கொடுக்கப்பட்டது. இதில் பாதிக்கும் மேற்பட்டோருக்கு 3 முதல் 6நாட்களில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. மலேரியா தடுப்பு மருந்து Sars Cov 2 தொற்று உடலில் உள்ள செல்களில் வேகமாக நுழைவதை தடுக்கும் என ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால் சீனாவில் ஒரு நோயாளிக்கு ஹைட்ரொக்ஸி குளோராகுயின் கொடுக்கப்பட்டு நிலைமை மோசமானது. மேலும் 4 நோயாளிகளுக்கு கல்லீரல் கோளாறு, வயிற்றுப்போக்கு ஏற்பட்டது என தெரிவிக்கப்பட்டது. ஒரு நோயை தடுக்க பயன்படுத்தப்படும் மருந்து சிறந்த முறையில் சோதிக்கப்படாமல் பயன்படுத்தினால் அது பக்க விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.



கொரோனா நோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படாத நிலையில் ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் மருந்தை பிரெஞ்சு மருத்துவர்கள் பரிசோதனைக்கு எடுத்துக் கொண்டிருக்கின்றனர். பல வருடங்களாக இந்த மருந்து மலேரியா பாதிப்புக்கு பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில் இது ஒட்டுண்ணியை அழிக்கும் தன்மையுடையதாகக்கருதப்படுகிறது. 6 நோயாளிகளிடம் இந்த மருந்தை அவர்கள் சோதனை செய்துள்ளனர். அதில், ஹைட்ரொக்ஸி குளோரோகுயினுடன் அஜித் ரோமைசினும் இணைத்துக் கொடுக்கும் போது இந்த மருந்து எந்த பயனையும் அளிக்கவில்லை எனத் தெரிய வந்திருக்கிறது.

இது குறித்து அந்நிறுவனத்தில் தலைமை மருத்துவர் ரவுல்ட்டின் ஆய்வு அறிக்கை வெளியிட்டார். பரிசோதிக்கப்பட்ட 3பேர் கடுமையாக நோய்வாய்ப்பட்டு ஐ.சியுவில் வைக்கப்பட்டனர். மற்றொருவர் உட்கொள்வதை தவிர்த்து விட்டார் எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. இந்த அறிக்கை வெளியான அடுத்த நாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தனது டிவிட்டர் பக்கத்தில் “ஹைட்ரொக்ஸி குளோரோ குயினுடன் அஜித்ரோமைசினும் இணைத்து கொரோனா மருந்தாக எடுத்துக்கொண்டால் மருத்துவ வரலாற்றில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை உணரலாம்” எனக் குறிப்பிட்டார். இதே கூற்றை பல முறை திரும்ப திரும்ப கூறவும் செய்தார். கடந்த சனிக்கிழமை இந்த மருந்து ஒரு கேம் சேஞ்சர் எனவும் கூறியிருந்தார்.

ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் மலேரி யாவுக்கு சிகிச்சை அளிப்பதை விட முடக்கு வாதம், லூபஸ் போன்ற நோய்களுக்கும் மிகவும் சிறந்த மருந்தாகப் பயன்படுத்தப் படுகிறது. சில நேரங்களில், உடலில் உள்ள அதிகப்படியான நோய் எதிர்ப்பு சக்தியை கட்டுப்படுத்த இந்த மருந்து திறம்பட உதவுகிறது. ஒருவேளை வைரஸ்கள் செல்களுடன் இணையும் வேகத்தை இது குறைக்க உதவலாம் எனவும் கருத்து தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இத்தாலிய, இஸ்ரேலிய மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இந்த ஹைட்ரொக்ஸி குளோரோகுயினை பயன்படுத்துவதற்கு சில காரணங்கள் இருக்கின்றன எனத் தெரிவித்தனர். ஆனால் முழுமையான பாதுகாப்பு குறித்து அவர்கள் கருத்துக் கூறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த மாதிரியான சோதனை தருணங்களில் தலைவர்கள் மிகுந்த நம்பிக்கை அளிக்கும் விதமாக செயல்பட வேண்டும். இந்த நோய்க்கு சிகிச்சை இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். மக்களுக்கு தவறான நம்பிக்கை அளிக்கக் கூடாது என அமெரிக்க மருத்துவர்கள் ட்ரம்ப்பின் நடவடிக்கை குறித்து வருத்தம் தெரிவித்தனர். மேலும், சிலர் ட்ரம்ப் மக்களின் மத்தியில் மிகை நம்பிக்கையை ஏற்படுத்தி வருகிறார் எனவும் கூறி வருகின்றனர். இந்த ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் கொரோனா நோய்க்கு எப்படி பயன்படும் என்பதை இன்னும் மருத்துவ உலகம் நிரூபிக்காத நிலையில் இந்த மருந்து குறித்த ஆய்வுகள் முடக்கி விடப்பட்டு இருக்கிறது.

ஹைட்ரொக்ஸி குளோரோகுயின் பற்றிய செய்திகளால் மக்கள் அந்த மருந்துகளை வாங்கி குவிக்க ஆரம்பித்து இருக்கின்றனர். இந்த மருந்து மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. கொரோனாவிற்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களின் பாதுகாப்புக்காகவே இது பயன்படுத்தப்படுகிறது.

ஜி20 குழுவில் இருக்கும் ஆர்ஜென்டினா, அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்சு, ஜெர்மனி, இந்தியா, இந்தோனேசியா, இத்தாலி, ஜப்பான், மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, தென் கொரியா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய நாடுகளில் தடுப்பு மருந்து கண்டுபிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது. கொரோனா வைரசின் தாக்கம் எப்போது தணியும் என்று கணிக்க முடியாத நிலை உள்ளது.

• • •